Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 14
குவிப்பு - 02
பக்கங்கள்- 12
விலை ரூபா 30.00
பெப்ரவரி 2011
(ISSN 1800-2641)

“Registered in the Department of Posts of Sri Lanka under No. “QD/109/News/2011”

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ Fax No - 023-2251161, E. Mail : sdmlogu@gmail.com, benoalexander@yahoo.com

# முப்பது வருட நிறைவில் மன்னார் மறைமாவட்டம்

## விமரிசையாக கொண்டாடப்பட்ட மறைமாவட்ட பெருவிழா

மன்னார் மறைமாவட்டம் யாழ்ப்பாண மறைமாவட்டத்திலிருந்து தனியாக ஒரு மறைமாவட்டமாக உதயமானதன் 30வது வருட நிறைவில் இறைவனுக்கு நன்றி செலுத்தி புளகாங்கிதமடைந்துள்ளது. கடந்த தைத்திங்கள் 29ம் திகதி சனிக்கிழமை தோட்டவெளி மறைசாட்சிகளின் அன்னை ஆலய வளாக அரங்கில் மன்னார் மறைமாவட்ட பெருவிழா திருப்பலி ஆயர் தலைமையில் மறைமாவட்டத்தில் பணிபுரியும் குருக்களின் கூட்டிணைவில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் ஆரம்பத்தில் பல்வேறு பங்குகளிலிருந்து அணிதிரண்டு வந்திருந்த பெருந்தொகையான இளைஞர் யுவதிகள் கைகளிலே கொடிதாங்கி பவனியாக முன் சென்றது இளையோர் ஆண்டின் எழுச்சியை எடுத்தியம்பியது. திருப்பலி மறையுரையில் ஆயர் அவர்கள், "பங்கிலுள்ள இளைஞர்கள் அனைவரும் அன்பிய வாழ்வின் ஓட்டத்துள் வந்துவிட்டார்கள் என்றால் திருச்சபை அற்புதமாகத் திகழும். இளையோர் அன்பு செய்கிற பிள்ளைகளாக மாறி கிறிஸ்துவுக்கும் சமூகத்திற்கும் தம்மை அர்ப்பணித்து உருப்பெறவேண்டும்; உரம் பெறவேண்டும், ஆழப்பட வேண்டும். குடும்பங்கள் தான் பிள்ளைகளை வளர்க்கும் தளம். (தொடர்ச்சி 7ம் பக்கம் காணவும்)



## “உண்மை இல்லாவிடின் நேர்மையான நீடித்த நல்லிணக்கத்தைக் காண முடியாது”

### கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு முன்பாக மன்னார் மறைமாவட்டம்





கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழுவின் சாட்சியப் பதிவுகள் கடந்த 08-01.2010 அன்று மன்னார் மாவட்டத்தில் இடம் பெற்றன. இதில் மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி. இராயப்பு யோசேப்பு ஆண்டகை தலைமையில் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை மற்றும் மறைமாவட்ட குருக்கள் அவை பிரதிநிதியாக அருட்பணி. சேவியர் குருஸ் ஆகியோர் இணைந்து கூட்டாக சாட்சியங்களை அளித்து சாட்சிய விபரத்திரட்டையும் சமர்ப்பித்தனர். அதில், முன்னேற்ற வழிமுறையில் செல்வதற்கும் மேலதிக வன்முறையையும் தவிர்ப்பதற்கும் நமது வரலாற்றில் இருந்து பாடங்களை கற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை நாங்கள் அங்கிகரிக்கின்றோம். முரண்பாட்டிற்கும் யுத்தத்திற்கும் அடிப்படைக் காரணங்களாகிய, தமிழரை பாதிக்கும் விடயங்களாகிய தமிழ் மக்களுடைய அரசியல் எதார்த்தத்தை அங்கீகரித்தல், மொழி, நிலம், கல்வி மற்றும் அரசியல் அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களை புரிந்துகொண்டு கவனம் செலுத்துவதுதான் நேர்மையான நீடித்த நல்லிணக்கத்தினை அடைவதற்கு மிகவும் அவசியம். உண்மை இல்லாவிடின் நேர்மையான நீடித்த நல்லிணக்கத்தைக் காண முடியாது என குறிப்புரைத்து, உண்மையின் முக்கியத்துவம், அரசியல் தீர்வின் முக்கியத்துவம் மற்றும் உடனடியாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

## கற்கிடந்த குளம் பங்கில் அமைவுற்ற அருளாளர் யோசப் வாஸ் கெபியும் வீதியும்






ஆருளாளர் யோசப்வாசின் விண்ணகப்பிறப்பின் 300வது ஆண்டு நிறைவின் நினைவாக கற்கிடந்தகுளப்பங்கில் அருளாளரின் திருச்சுருப கெபியொன்று பங்குத்தந்தை அருட்பணி.ச.மரியதாசன் சீமான் அவர்களின் முயற்சியால் கட்டப்பட்டுள்ளது. இக்கெபியானது கற்கிடந்தகுளம், நீராவிபுரம், பிச்சகுளம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் வீதிகள் சந்திக்குமிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அருளாளர் யோசப்வாசின் நினைவுதினமான 16.01.2011 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00மணிக்கு முருங்கன் டொன்பொஸ்கோ நிறுவன முதல்வர் அருட்பணி. பயஸ் அவர்களால் இக்கெபியானது ஆசீர்வதிக்கப்பட்டது. அருளாளர் யோசப்வாஸ் வீதி என புதிதாக பெயரிடப்பட்ட, இக்கெபியின் முன்னேயிருக்கும் வீதிக்கான பெயர்பலகை முருங்கன் டொன் பொஸ்கோ சிறிய குருமட அதிபர் அருட்பணி. போல் அவர்களால் திரை நீக்கம் செய்யப்பட்டது. சற்றில் பங்குத்தந்தை தலைமையில் பெருவிழா கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

## இளையோரின் பாதுகாவலர்

### டொன் பொஸ்கோ திருவிழா



கடந்த ஏழு ஆண்டுகளாக மன்னார் மறைமாவட்டத்தின் முருங்கன் பங்கில் டொன் பொஸ்கோ நிறுவனம் அமைத்து அரும்பணியாற்றி வரும் சலேசியன் சபையினர் தமது சபை நிறுவுனரின் விண்ணகப் பிறப்பு திருவிழாவை 31.02.2011 அன்று சிறப்பாக கொண்டாடினர். அன்றைய தினம் மறைமாவட்ட ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி மு.ப 11.00 மணியளவில் முருங்கன் டொன் பொஸ்கோ மண்டபத்தில் நிறைவேற்றப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து இந்நிறுவனத்தில் கணனி மற்றும் தொழிற் பயிற்சிகளை நிறைவு செய்த இளையோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஆயர் அவர்கள் தனது ஆசியுரையில் “முருங்கன் டொன் பொஸ்கோ நிறுவனம் மன்னார் மறைமாவட்டத்திற்கு கிடைத்த வரப்பிரசாதம்” என குறிப்பிட்டார். அதன் பின்னர் தொழில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள இளையோரின், கைவினைப் பொருட்களின் கண்காட்சி நிகழ்வு இடம் பெற்றது. இந்நிகழ்வில் பல அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்திருந்தனர். முருங்கன் டொன்பொஸ்கோ நிறுவன இயக்குனர் அருட்பணி. பயஸ் அவர்களின் தலைமையில் அங்குள்ள அனைத்து சலேசியன் சபை குருக்களும் அருட்சகோதரர்களும் விடுதி மாணவர் மற்றும் தொழில் பயிற்சி மாணவர்கள் இணைந்து விழாவை நேர்த்தியாக நடத்தினர். இங்கு அண்மையில் டொன்பொஸ்கோ சிறிய குருமடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சலேசியன் சபையினர் மன்னார் மறைமாவட்டத்திற்கு ஆற்றும் சேவையை பாராட்டி, இளைஞர் ஆண்டில் இளையோருக்கான அவர்களின் விசேட பணி இன்னும் விரிவடைந்து பலன் கொடுக்க வாழ்த்துகிறோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
## ஆசிரியர் குழு பகர்வு

### மன்னார் மறைமாவட்டம் குன்றின் மீது சுடரும் கிறிஸ்துவின் தீபமாகட்டும்

*மன்னார் மறைமாவட்டம் முகிழ்ந்து, மலர்ந்து, மறைசாட்சியரின் விசுவாச வெளிச்சத்தில் நடைபோட்டு 30 வருட நிறைவின் நினைவில் நின்று இதய நன்றிகளை இறைவனுக்கு சாற்றுகின்றது. இந்த 30 வருட பயணத்திலே எம் மறைமாவட்டம் வளர்ச்சியின் படிநிலைகளில் ஏறி வந்துள்ளது. தேவ அழைத்தலின் விளை நிலமாக காட்சி தருகின்றது. தனியொரு மறைமாவட்டமாக உதயமாகிய வேளையிலே 12 பேராக இருந்த எம் மண் தந்த குருக்கள் இன்று 69 பேராக உயர்ந்துள்ளார்கள். பல்வேறு துறவற சபைகளுக்கு பெருந்தொகையான இறைபணியாளர்களை இம்மறைமாவட்டம் உவந்தளித்துள்ளது. ஆரம்பத்தில் 15 ஆகவிருந்த மறைமாவட்டப் பங்குகள் இன்று 31ராக பெருகியுள்ளன. பங்குகளில் அன்பியங்கள், பல்வேறு அமைப்புகள், இயக்கங்கள், பக்த சபைகள் செயற்படுகின்றன. அன்பிய பணியாளர்கள், தன்னார்வப் பணியாளர்கள், இறைவார்த்தைப் பணியாளர்கள், மறைவாழ்வுப் பணியாளர்கள் என ஆயிரக்கணக்கில் பணியாளர்கள் பரிணமித்துள்ளார்கள். சிறப்புப் பணிக்கென புதிய பல ஆணைக்குழுக்கள் மறைமாவட்ட மட்டத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மறைமாவட்ட வெள்ளி விழாவைத் தொடர்ந்து "அன்பிய வாழ்வினூடாக கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணம்" என்ற மறைமாவட்ட பொது இலக்கை கண்முன் கொண்டு செபம், இறைவார்த்தை, நற்செய்தி அறிவிப்பு, குருத்துவம் என்னும் கருப்பொருட்களில் கடந்த நான்கு ஆண்டுகள் மேய்ப்புப் பணித்திட்டங்கள் தீட்டப்பட்டு செயலாற்றப்பட்டுள்ளது. ஐந்தாண்டு திட்டத்தின் இந் நிறைவாண்டில் 'இளைஞனே கிறிஸ்துவின் சாட்சியாய் விழித்தெழு' என்று மையப் பொருளமைத்து இளைஞர் ஆண்டாய் பிரகடனப்படுத்தப்பட்டு எம்மறைமாவட்டம் இளமைப் பொலிவுடன் இயங்கி வருகின்றது. இந்த 30 வருடங்கள் அக்கினிப் பிரளயமாக போரும் அது அந்த இழப்புகளும் எமது சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையை சிதைத்து சீர்குலைத்து வந்தாலும் அது எமது மக்களின் விசுவாச வாழ்க்கையை நெருப்பிலிட்ட பொன்னாக புடமிட்டுள்ளது என்பது பொய்யாகா. எமது மறைமாவட்ட ஆயர் தனது திருவருகைக்கால மேய்ப்பு பணி மடலில், "எமது மக்கள் இழப்புகள் நடுவே இறை நம்பிக்கையிலும் ஆன்மீக வாழ்விலும் காட்டிய உறுதிப்பாடுகள் அபாரமானது" என்று கூறிய வரிகள் இதனை கட்டியங் கூறுகின்றது. இப்படியாக 30 வருட நிறைவில் எமது வளர்ச்சிப்படியை எண்ணி புளகாங்கிதமடையும் அதேவேளை எமது சறுக்கல்கள், தேக்கங்கள், உறக்கங்கள் அனைத்தையும் சுய ஆய்வு செய்து கொள்வதும் அவசியம். சுய விமர்சனம் சுறுசுறுப்பாக நாம் இயங்க நம்மை தூண்டிவிடும் கிரியா ஊக்கியாகும்.*

*அன்றொரு நாள் குலோத்துங்க சோழனுக்கு முடிசூட்டு விழா. அறிஞர் பெருமக்கள் அவையை நிரப்பி அரிமாவாய் வீற்றிருக்கும் மன்னவனை மகிழ்ந்து விதந்து செந்தமிழால் பண்பாடி கவிமழை பொழிந்து கொண்டிருந்த வேளையது. அவையை ஊடறுத்து கூன் விழுந்த ஔவை கிழகி அவசரமாக வந்து, 'வரப்புயர' என வாய்ச்சொல் உதிர்த்தாள். அடங்கிய அவையில் சோழன் குரல் கர்ண கடூரமாய் ஒலித்தது; "ஏய் பாட்டி மன்னவனை கேலி செய்கிறாயோ?". ஔவை சொன்னாள் அமுத மொழிகள், "வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும் குடி உயர கோன் உயர்வான்".*

*எம் திருச்சபையின் அடிப்படை அலகாக இருப்பது குடும்பங்கள், எம் குடும்பங்களை முதிர்ச்சியில் உருவாக்க களம் அமைத்து தந்திருப்பது அன்பியங்கள். இந்த அன்பிய வாழ்வினூடாகவே கிறிஸ்தவ முதிர்ச்சியை அடைவதே நமது வழி முறை. இந்த வழிமுறை இயக்கத்தில் நம் மறைமாவட்டத்தின் அனைத்து இயக்கங்களும் அங்கம் வகிக்கிறதா? என்று உண்மையாக ஆராய்ந்து, கேட்டுப்பார்த்தால் 'இல்லை' என்ற பதிலை ஏற்று கொள்ளத்தான் வேண்டும். அன்பிய வாழ்வு முறையில் எம் மறைமாவட்டத்தில் விழிப்பு நிலை பங்குகளும் உண்டு; உறங்கு நிலை பங்குகளும் உண்டு, ஆர்வமுள்ள பணியாளர்களும் உண்டு; சோர்ந்து போன பணியாளர்களும் உண்டு. வீச்சோடு செயலாற்றுவோரும் உண்டு; பேச்சோடு முடித்துக் கொள்வோரும் உண்டு. எனவே இந்த இளைஞர் ஆண்டில் உறுதியோடு நமது ஊற்றுக்கு திரும்ப வேண்டும். திருத்தூதர்கள் மக்களுக்கு கற்றுத்தந்த தொடக்க வாழ்வுமுறை நமதாக வேண்டும். மனித வாழ்வின் அத்துணைக் கூறுகளையும் இறைவார்த்தையின் ஒளியில் வாழ முற்படும் அன்பிய சமூகங்கள் அரங்காடட்டும். அன்பியம் எனும் வரப்பு உயரட்டும். முப்பதாவது வயதில் பகிரங்கப்பணியை பாரினில் பாங்குடன் செய்த எம்பெருமான் கிறிஸ்துவின் சாட்சியாய் விழித்தெழும் இளையோர், பெரியோர், சிறியோர், முதியோர் அருட்பணியாளர், பொதுநிலை பணியாளராய் நாம் பலன் கொடுத்து எம் மறைமாவட்டத்தை குன்றின் மீதிட்ட கிறிஸ்துவின் தீபமாய் சுடர் வீசச் செய்வோம். செய்வோமா?*



# வாசகர் எண்ணங்கள்



## வாழ்த்துகிறேன்

வாழ்வுதரும் வார்த்தையைச் சுமந்துவரும் மன்னாவே!
வாழுகின்ற மக்களுக்கு இறைவார்த்தையை வழங்கியே
வாழ்க்கைக்கு வழிவகுத்து நிற்கின்றாய்
வாழ்க வளர்க வளமுடன் என வாழ்த்துகின்றேன்
அன்புடன் நீ எமது கிராமத்திற்கு வருவதற்குமுன்
அருகின்பட்டினம் மன்/வவு.புனிதப் பொருட் கடைதனில்
அன்பின் சிகரமே உனைநான் பெற்றிடுவேன்
அகிலம் எங்கும் உனதுபணி சிறந்து விளங்கிட
அன்பர் யேசுவிடம் இறையருள் வேண்டுகிறேன்

சி.வின்சன்யோட்ஸ்
143 சின்னப்பண்டிவிரிச்சான், மடுக்கோவில், மடு.

## மன்னாவே நீயே மக்களின் உயிர்



மாதம் மாதமாய் வந்து - இறை
மக்களின் மனதை கவரும் மன்னாவே!
நீ விவிலிய அறிவை வளர்க்க வாய்ப்பளிக்கின்றாய்
உன்னை காணும் போது என் மனதிற்கு
உயிர் பிறக்கின்றது
உன் பணி சிறக்க நல்வாழ்த்துக்கள்
ஆயுளுக்கும் நீ எங்களுக்காக வரவேண்டும்

சி. ஜெ. பிரியங்கா பிகிறாடோ,
பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.

## மன்னாவே நீ நீடூழி வாழ்க!



மன்னாவே! மன்னாவே!
மன்னாரில் வெளிவரும் மன்னாவே!
கடவுளின் வார்த்தையை
மக்களுக்கு அறிவிக்கும் இனிய
மன்னாவே நீ நீடூழி காலம் வாழ்க!
கடவுளின் உண்மையுள்ள வார்த்தையை
கொண்டு வரும் மன்னாவிற்கு அன்பு முத்தங்கள்

ஜெ. துஷ்யந்தன் துரம், பிரதான வீதி, பேசாலை.

## பார் போற்றட்டும் மன்னாவை



உன் வரவில் மலர்ந்த மலர்களில் நானும் ஒருத்தி
உன் தயையோடு என்
ஆற்றலை வெளிப்படுத்தினேன்!

என் ஆற்றலை வெளிப்படுத்த
யார் தான் உதவுவார் என
எண்ணித் தவித்த போது
உன் தரிசனம் எனக்குக் கிடைத்தது.
உன் துணையுடன் சாதனைகள் புரிய
என் மனம் தவிக்கிறது
என் வாழ்வில் புதிய அத்தியாயத்தைத் தந்த நண்பனே
நீ என்றும் வளமுடன் வாழ்க!

ஜி. மரினா மரியநாயகி, நடுக்குடா, பேசாலை.

## மகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்

மானிட ஜாதியின் மனங்கள் மரித்துப் போயும், மரத்துப் போயும், குணங்கள் குன்றிப் போயும் உள்ள இக் குவலயத்திலே என் மனக் குமுறல்களையும், குறைகளையும் எடுத்தியம்புவதற்கு மனிதமுள்ள ஒரு மனிதனையும் காணவில்லை. ஆனால் என் உணர்வுகளுக்கு உயிரூட்டி, உருக்கொடுத்து மேலும் வளர உரமளித்து என்னையும் ஓர் படைப்பாளியாகப் படைத்த என் ஆத்ம குரு "மன்னாவே" உன்னை மனதார வாழ்த்துகின்றேன்.

அ.மேரி கொண்செப்ரா, மடுக்கோவில், மடு.




# இளைஞனே! உனக்கு ஓர் அழைப்பு



ஏழை – எளியவர்கள், அகதிகள், உறவு இழந்தவர்கள் ஆகியோருக்கு மறு வாழ்வுதர புனித பிரான்சிஸ்கு அசிசியின் அருட்பாதையில் சென்று பணிபுரிய ஓர் அரிய வாய்ப்பை பெற்றுக்கொள்ள அன்புடன் அழைக்கின்றார்கள் பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்கள். சிதறுண்ட எம் மக்களுக்கு மறு கிறிஸ்துவாக சென்று பணிபுரிய இதோ இளைஞனே உனக்கு ஓர் சந்தர்ப்பம்

க.பொ.த சா/த அல்லது க.பொ.த உ/த கற்று
எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும் உனக்கே இந்த

இறை அழைப்பு

மேலதிக தொடர்புகளுக்கு:
இயக்குனர் : பிரான்சிஸ்கன் மறைபரப்பு சகோதரர்கள்
துடரிக்குளம், செட்டிகுளம், வவுனியா. தொ.பே. 077 2443436, 024 3241781


## மன்னா ஆண்டுச் சந்தா விபரம்

தனிப்பிரதி ஒன்று : ரூபா 30

உள்நாடு: ரூபா 600 (இலங்கை ரூபா)

வெளிநாடு: ரூபா 3000 (இலங்கை ரூபா)

சந்தாப் பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.

**காசோலை மூலம் செலுத்துவதாயின்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltp. (Mannar Branch)

பணம் பெறுபவரின் பெயர் "The Manager - MANNA"

வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No. 020020029782

## நீத்தார் நினைவு, பிறந்தநாள், திருமண யூபிலி போன்றவற்றை பிரசுரித்தல்

நீத்தார் நினைவுகள் கறுப்பு வெள்ளை நிறத்தில் மட்டுமே பிரசுரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

பிரசுர கட்டணமாக ரூபா 4000 அறவிடப்படும்.

பிறந்தநாள், திருமண யூபிலி போன்றவை கறுப்பு வெள்ளை நிறத்திலும் பல நிறத்திலும் பிரசுரிக்கப்படும்.

கறுப்பு வெள்ளை நிறத்தில் : ரூபா 4000
பல நிறத்தில் : ரூபா 7000

உங்கள் விடயங்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக விடயங்களை அனுப்பவேண்டும்.

- மன்னா நிர்வாகம்.-

## உங்கள் கவனத்திற்கு.......

- பங்குத்தளச் செய்திகள் பங்குத் தந்தையின் அங்கீகாரத்தோடு அனுப்பி வைக்கப்பட வேண்டும். பங்குத்தந்தையின் அங்கீகாரமில்லாத பங்குச் செய்திகள் பிரசுரிக்கப்பட மாட்டாது.
- காலத்திற்கேற்ற பல தரமான ஆக்கங்கள் காலந்தாழ்த்தி கிடைக்கப்பெறுகின்றன. உரிய காலத்திற்கேற்ற ஆக்கங்களை முன்கூட்டியே எதிர்பார்க்கிறோம். எந்த விடயமாகினும் மன்னா வெளிவரும் மாதத்தின் முன்னைய மாதம் 15ம் திகதிக்கு முன்னதாக எமக்கு கிடைக்கப்பெற வேண்டும்.
- குறுக்கெழுத்துப் போட்டிகள், மறையறிவுப் போட்டிகளுக்குரிய பரிசில்கள் இனி பணமாக அல்லாது நினைவுப்பரிசில்களாக கொடுக்கப்படும்.

- பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்ட / பங்குத்தளச் செய்திகள்

## பெரிய கோமரசன் குளம் பங்கில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம்

தகவல் :- வே. பிரதாப்

பெரிய கோமரசன் குளம் பரலோக மாதா ஆலயத்தில் 50 மாணவ, மாணவியர்களுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் 12.12.2010 ஞாயிறன்று காலை 8.00 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி. வண. கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களினால் வழங்கப்பட்டது. இவர்களுக்கான வகுப்புக்கள் அருட்சகோதரிகளால் எடுக்கப்பட்டன. பெரிய கோமரசன்குளம் பங்குத்தந்தை அருட்பணி. பிரான்சிஸ் மரி டி கோல் அடிகளார் நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்.

## யோசப்வாஸ் நகரில் குருக்கள் கௌரவிப்பு நிகழ்வு

தகவல் :- P. இராயப்பு -இளைப்பாறிய அதிபர்

தோட்டவெளிப் பங்கில் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய மற்றும் விடத்தல்தீவு கிராமத்தைச் சேர்ந்த குருக்கள் கடந்த 19.12.2010 அன்று யோசவாஸ் நகரில் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் முதல் பங்குத்தந்தை அருட்பணி. சகாயாநாதன் IVD, அருட்பணி எ. டெனி கலிஸ்ரஸ், அருட்பணி அ. றஜனிகாந்த், திருப்புமுனை இயக்குனர் அருட்பணி. வின்சன்ட் பற்றிக் அ.ம.தி, அருட்பணி. அல்பிறட் அ. ம. தி. ஆகியோரும் கலந்துகொண்டனர். இவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. பங்குத்தந்தை அருட்பணி. பி. ஞானராஜ் குரூஸ் (நேரு) அவர்களின் நெறிப்படுத்தலில் ஆலயமேய்ப்புப்பணிச் சபையால் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

## முருங்கன் பங்கு கிறிஸ்துபிறப்பு இன்னிசை நிகழ்வுகளும் – ஒளிவிழாவும்

A. D. தேவதாசன் அல்மேடா, செயலாளர், பங்குச் சபை, முருங்கன்

கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு, முருங்கன் பங்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் 21.12.2010 - 30.12.2010 வரை பங்கிலுள்ள பத்து ஆலயங்களிலும் கிறிஸ்துபிறப்புக் கீதங்களோடு கூடிய வீதிநாடகத்தை நடத்தி சமுதாய விழிப்புணர்வையும், இறை அன்பையும் வெளிப்படுத்தினர். பங்கு பொது ஒளி விழா 29.10.2010அன்று முருங்கன் பங்குக் கோவில் மேடையில் நடைபெற்றது. நடனங்கள், பாடல்கள், கவிதைகள், பேச்சுக்கள், நாடகங்கள் என பலவிதமான கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. மெதடிஸ்த திருச்சபையினரின் முருங்கன் பிரிவினர் "பிறரோடு பிறப்பு விழா" எனும் தாளலய நாடகத்தினை சிறப்பாக வழங்கியிருந்தனர். இந்நிகழ்வுகளுக்கு மன்னார் மடு மாதா சிறிய குருமட அதிபரும், முன்னாள் குருமுதல்வருமான அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அனைத்து நிகழ்வுகளையும் முருங்கன் பங்குத் தந்தை அருள்ராஜ் அடிகளார் சிறப்புற நெறிப்படுத்தி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பள்ளிமுனை பங்குச் செய்திகள்

### புனித லூசியா அன்னை ஆலயத் திருவிழா

தகவல்:
ஜோ. எல்சி இவான்சலின்

பள்ளிமுனைப்பங்கின் புனித லூசியா அன்னையின் திருவிழா 2010.12.04 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. மறை-மாவட்டத்திலுள்ள வெவ்வேறு பங்குகளிலுள்ள நம் குருக்கள், 'குருக்கள் ஆண்டு' கருப்பொருளில் சிறப்பாக மறையுறையாற்றி எம் மக்களுக்காக செபித்தார்கள். அன்புக்குரிய நமது ஆயர் அவர்கள் தமது குருப்பட்ட நாளில் எம் பாதுகாவலின் பெருவிழா (13.12.2010) திருப்பலியை தலைமையேற்று ஒப்புக்-கொடுத்தது இரட்டிப்பான மகிழ்ச்சியை தந்தது. ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை எம் ஊரைசுற்றி லூசியா அன்னையின் திருச்சுருபம் எடுத்து வரப்படுவற்கு ஒப்ப கடந்த திருநாளில் புனித லூசியா அன்னையின் திருச்சுருபம் ஊரை சுற்றி வலம் வந்தது எமக்கு மகிழ்ச்சியை அளித்தது. புதிய பங்குமனைக்காக ஆயர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். பங்குத்தந்தை பீற்றர் மனோகர் அவர்கள் விழா ஏற்பாடுகளை நெறிப்படுத்தியிருந்தார்.

### ஒளிவிழா நிகழ்வுகள்

கிறிஸ்து பிறப்பு ஒளிவிழாவும் நத்தார் இன்னிசை நிகழ்ச்சியும், இம்முறை பங்குத்தந்தையின் தலைமையில், ஒளிவிழா ஏற்பாட்டுக் குழுவினர் மறைவாழ்வுக்கல்விப் பணியாளர்கள் ஒத்தழைப்பில் சிறப்பாக இடம்பெற்றன. 29.12.2010 அன்று பங்கு ஒளிவிழா நிகழ்வுகள் இடம்பெற்றன. இவ்விழாவின் பிரதம விருந்தினராக மறைக்கல்வி இயக்குனர் ஜெயபாலன் அடிகளார் கலந்துகொண்டதோடு, எழுத்தூர் பங்குத்தந்தையும் கலந்து சிறப்பித்தார். மறைக்கல்வி பரீட்சையில் 85 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும், அன்பிய பணியாளர்களுக்கு அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன. ஈற்றில் இறைவார்த்தைக் குழு செயலரினால் நன்றியுரை ஆற்றப்பட்டது.

### வெற்றியின் சாதனையாளர்

2010 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையில் பள்ளிமுனைப்பங்கைச் சேர்ந்த ஜீவராஜன் யூட் விதுஸன் பிகிறாடோ 193 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையில் மூன்றாம் இடத்தை பிடித்து சாதனை நிலைநாட்டியுள்ளதால் பள்ளிமுனைப்பங்கு பெருமையடைகின்றது. மன்னார் மாவட்டத்திலே முதல் தடவையாக அகில இலங்கை ரீதியாக மூன்றாம் இடத்தைப்பெற்ற எம் மண்ணின் மைந்தனை கௌரவிக்கும் நிகழ்வு 11.11.2010 இல் எமது பங்கில் நடைபெற்றது. பள்ளிமுனையின் நுழைவாயிலில் இருந்து சாதனையாளனையும் அவரது பெற்றோரையும் அவரை புலமைபரீட்சைக்காக ஆயத்தப்படுத்திய புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அதிபரையும் ஆசிரியரையும் ஊர்வலமாக ஊர்தியில் பங்குமக்களால் அழைத்து வரப்பட்டு நன்றித்திருப்பலி குருமுதல்வர் விக்ரர் சோசை அவர்கள் தலைமையில் பங்குத்தந்தையோடு இணைந்து ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி முடிவில் மாணவனை கௌரவித்து பரிசில்களும் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. பள்ளிமுனை வாழ் மக்கள் இவர் இறையன்பிலும், கல்வியிலும் சிறந்து விளங்க வாழ்த்தி செபித்து நிற்கின்றனர்.

## அடம்பன் பங்கில் ஒளிவிழா

தகவல்: சவேரியான்

புனித மரிய மாதா ஆலய செயலர், மாளிகைத்திடல், அடம்பன்.

நீண்ட காலத்திற்கு பிற்பாடு 26-12-2010 அன்று அடம்பன் பங்கில் ஒளிவிழா நிகழ்வு பங்குத்தந்தை அருட்பணி. லகோன்ஸ் பிகிறாடோ தலைமையில் இடம்பெற்றது. அருட்பணியாளர்கள் சீமான் மரியதாஸ், டெனி கலிஸ்ரஸ், இயேசுசபை அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதரிகள், அடம்பன் இராணுவ பொறுப்பாளர், கிராம அலுவலர் உட்பட பங்குமக்கள் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்தனர். பங்கின் துணை ஆலயங்களிலிருந்து கவிதை, பேச்சு, நடனம், நாட்டுகூத்து என பல நிகழ்வுகள் அரங்கேறின. இராணுவத்தினரும் கிறிஸ்து பிறப்பு கீதம் பாடி நிகழ்வில் பங்கேற்றனர். மறைக்கல்வி பரீட்சையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பங்குச்சபை செயலாளரின் நன்றியுரையை தொடர்ந்து நிகழ்வுகள் நிறைவு எய்தியது.

## முதல் அர்ப்பணம

திரு இருதயத்தின் சின்னஞ்சிறிய பிரான்சிஸ்கன் சகோதரி

தகவல்: அருட்சகோதரி மேரி பற்றீசியா

அருட்சகோதரி மேரி புளோறிடா டயஸ் கடந்த 03.11.2010 இல் தனது முதல் அர்ப்பணத்தை திரு இருதயத்தின் சின்னஞ்சிறிய பிரான்சிஸ்கன் சபைக்கென கொடுத்துள்ளார்.

30.05.1980ல் திரு திருமதி சவிரியப்பு எலிசபெத் தம்பதிகளின் இரண்டாவது பிள்ளையாகப் பிறந்த இவர் தாழ்வுபாட்டு பங்கைச் சேர்ந்தவர். இவ்வருட்சகோதரியின் அர்ப்பணத் திருப்பலி தாழ்வுபாட்டில் புனித சூசையப்பர் ஆலயத்தில் அதி வணக்கத்துக்குரிய மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. அத்துடன் இத்தாலியிலிருந்து வருகை தந்த சபையின் தலைவி அருட்சகோதரி மேரி அக்னேசும் அவருடைய ஆலோசகரான அருட்சகோதரி மேரி கபிரியேலாவும் இத்திருப்பலியில் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

இந்த முதல் அர்ப்பணத் திருப்பலிக்கு தமது நிறைவான ஒத்துழைப்பை வழங்கிய பங்குத்தந்தை ஸ்ரீபன் அடிகளாருக்கும், ஏனைய அருட்தந்தையர்களுக்கும் அருட்சகோதரிகளுக்கும் குடும்பத்தாருக்கும், பங்கு மக்களுக்கும் உளமார்ந்த நன்றிகள்.





## திருப்புமுனை புதுவாழ்வகத்தின் ஒளிவிழா நிகழ்வும், புதுமுனைப்பு நூல்வெளியீடும்

தகவல் : எ. எமில்றொமில்டன்,
நிதிநிலை அலுவலர்,
CRADA





திருப்புமுனை புதுவாழ்வகத்தின் ஒளிவிழாநிகழ்வு 29.12.2010 அன்று மாலை 2.30 மணிக்கு திருப்புமுனை புதுவாழ்வகத்தில் இடம்பெற்றது. இதில் பிரதமவிருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கொமசல் வங்கி முகாமையாளர் திரு. அருள்ஞானசீலன், மன்னார் பிரதேசசபை தொழில்நுட்ப உத்தியோகஸ்தர், திரு.செல்வக்குமார் அன்ரன் துரம் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். நிகழ்வின் இறுதியில் ஆயர் அவர்களினால் புதுமுனைப்பு நூல் வெளியீட்டு வைக்கப்பட்டது. இந்நூல் பற்றிய விமர்சனம் எழுத்தாளரும், மன்/பற்றிமா மத்திய மகாவித்தியாலய ஆசிரியருமாகிய S.A உதயன் அவர்களால் வழங்கப்பட்டது.

## விவிலிய கருத்தரங்கு



விவிலிய மறைத்தூது, அன்பிய ஆணைக்-குழுக்களின் முன்னெடுப்பில் புனித செபஸ்ரியார் பேராலய 'இயேசுவே ஆண்டவர்' தியான மண்டபத்தில் கடந்த 15-01-2010 அன்று அரைநாள் இறைவார்த்தை கருத்தரங்கு நடாத்தப்பட்டது. பேராலய பங்குத் திருவிழாவின் நவநாட்களுக்கு மறையுரையாற்ற வருகை தந்திருந்த தமிழக விவிலிய ஆணைக்குழுவின் செயலரும் தோழன் சஞ்சிகையின் ஆசிரியருமான முனைவர் அருட்பணி. மரிய டெல்லசு இவ்விவிலிய கருத்தரங்கின் வளவாளராக செயற்பட்டார். மறைமாவட்ட பங்குகளிலிருந்து விவிலியத்தில் தாகம் கொண்டவர்களும் அன்பிய பணியாளர்களுமாக 75 உறுப்பினர்களும் பேராலய பங்கிலிருந்து பல்வேறு அமைப்புகளின் பெருந்தொகையான பணியாளர்களும் இவ்விவிலிய கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## குடும்ப விழாவில் மனம் நிறைந்த மணித்துளிகள்

திருமதி. கிறிஸ்ரிராணி துரம்,
தி. கு. பொதுநிலை அங்கத்தவர்,
பேசாலை பங்கு.

திருக்குடும்ப பெருவிழா, மார்கழி மாதம் 26ம் நாள் ஞாயிறு திருப்பலி வேளையிலே திருக்குடும்ப அருட்சகோதரிகள், பொதுநிலையினர் இணைந்து திருநாளைக் கொண்டாட கூட்டுத்திருப்பலியில் குடும்பங்களாக ஒன்றுகூடினர். புனித வெற்றி அன்னை ஆலயத்தின் பங்குத் தந்தையர் அருட்பணி. அகஸ்ரீன் புஸ்பராஜ், அருட்பணி. எமில் எழில்ராஜ், மண்ணின் மைந்தன் திருத்தொண்டர் டேவின் என்பவர்களால் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியில் திருக்குடும்பம் பற்றியும் அருட்சகோதரிகள், பொதுநிலையினர் பணிபற்றியும் யாவர் மனதையும் தொடும்படி இறை சிந்தனைகள் கொடுக்கப்பட்டன. திருப்பலி நிறைவடைய ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டு தம் பணியின் அர்ப்பணத்தையும் புதுப்பித்துக் கொண்டனர். குடும்ப உறவின் அடையாளமாக மதிய உணவில் இணைந்து மகிழ்ச்சியில் திளைத்தனர்.

பேசாலை திருக்குடும்ப கன்னியர் மடத்து தலைவி அருட்சகோதரி விற்றுவார் அவர்கள் திருக்குடும்ப சபை பற்றியும் சபை ஸ்தாபகர் பீற்றர் பியன்வெனு பற்றியும் சிறப்புரையாற்றினார். இறுதியாக பல கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. பொதுநிலையினரின் ஆடல், பாடல், நடிப்பு என்பன அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. இதுவல்லவோ குடும்ப உறவு என்று பெருமை பாராட்ட வைத்தது.

இம்மண்ணில் நாம் திருக்குடும்பத்தைப் போல் அன்பிலும் பண்பிலும்வாழ இறையாசீர் வேண்டி பி. ப. 6.00 மணிபோல் விழா முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

# விழிகள் உள்முகமாக!



முனைவர் அப்துல்காதர்

*"நம்பிக்கை என்பது உள்ளே நிகழும் உயிர்ச் சுவாசம்.
இளைய செடிகளுக்கு இது ஒரு தாரக மந்திரம்."*

சக்தி இருவகைப்படும். ஒன்று இயங்கு சக்தி; மற்றொன்று இயக்கு சக்தி. இயக்கு சக்தியாக அனுபவம் மிக்க முதியவர்கள் விளக்க வேண்டும். இயங்கு சக்தியாக இளைஞர்கள் களப்பணியாற்ற வேண்டும்.

பேராசிரியர் கவிக்கோ அப்துல்ரகுமான், "பருவம் என்பது ஒரு பேனா. அதில் இளமை ததும்பியிருக்கும்பொழுது அதற்கு என்ன எழுதுவதென்று தெரிந்திருப்பதில்லை. முதுமையாய் இருக்கையில் என்ன எழுதுவதென்று அதற்குத் தெரிந்திருக்கிறது. ஆனால், அதனுள் 'மை' இல்லை" என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறார். "Thinkers do not work, workers do not think" என்னும் ஆங்கிலப் பழமொழியும் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

இன்றைய சூழலில் நல்ல வீணைகள் எல்லாம் நலங்கெடப் புழுதியில் கிடக்கின்றன. இந்த இளைய வீணைகளில் சுதியேற்றினால் விரும்பிய எந்த இராகத்தையும் வாசிக்கலாம். கப்பலின் பின்புறம் எரியும் விளக்கு முதியவர்களின் அனுபவம். அந்தக் கப்பலின் பயணத்திற்கு அது பயன்படப்போவதில்லை. பின்தொடரும் இளைய கப்பல்களுக்கு அவ்விளக்கே பயணத் திசைகாட்டி. சமூக முன்னேற்றத்தில் இந்த இருவருக்கும் சமமான பங்கு உண்டு. இறைவன் படைப்பில் எதுவும் இழிந்தது இல்லை, கெட்டது இல்லை. விலங்கினங்கள் எல்லாம் படைக்கப்பட்ட காலத்திலிருந்து தங்கள் குணங்களை மாற்றிக்கொண்டதில்லை. புலி சைவமானதில்லை, நுளம்பு இரத்த தான வரிசையில் இடம் பிடிப்பதில்லை.

மனிதப் படைப்புக்கும் இறைவனுடைய படைப்புக்கும் வேறுபாடு உண்டு. "ஈசனார் சிருஷ்டியும் திகழ் சீவனார் சிருஷ்டியும் வெவ்வேறே" என்பது கைவல்யம். "ஆதியில் இறைவன் அனைத்தையும் படைக்கு முன்பு 'வெளிச்சம் உண்டாகுக' என்றான்; வெளிச்சம் உண்டாயிற்று" என்பது பைபிள். ஆம் இறைவன் வெளிச்சத்தில் படைக்கின்றான், மனிதன் இருட்டில் படைக்கிறான்.

"சாணமும் இரத்தமும் சூழ்ந்த இடத்திலிருந்து உமக்குப் பரிசுத்தமான பாலை நாம் தரவில்லையா?" என்பது திருக்குர்ஆனின் இறை வசனம். ஆம்! ஜீவநதிகளை இறைவன் படைக்கிறான், கூவ நதிகளை நாம் படைக்கிறோம். மாற்றம் அடைந்துகொண்டே வரும் மனிதர் மாற்றத்தின் ஏற்றம் காண வேண்டுமே தவிர, இழிந்துவிடல் ஆகாது. அம்மாற்றத்தை ஏற்றமாக மாற்றவேண்டிய பொறுப்பு இளைஞர்கள் கைகளில்தான் இருக்கிறது. சூழலுக்கு ஆட்பட்டுச் சுத்தமான பாலைப்போன்ற இளைஞர்கள் திரிந்து விடுகிறார்கள். சூழல் எத்தகையதாக இருந்தாலும் அதனால் தன் இயல்பும் நிலையும் மாறாது நிலைநிறுத்திக்கொள்வது இளைஞரின் கடன். சேற்றில் விழும் நிழலில் சேறு படிவதில்லை. நெருப்பின் மீது விழும் நிழல் எரிந்துவிடுவதில்லை. ஒரு மோசமான சூழலில், தான் மட்டும் கெட்டுவிடாது இருப்பது இளைஞர்க்குச் சிறப்பு என்றாலும் இலட்சிய இளைஞர்களுக்கு அது போதாது. உப்புக் கடலில் உலவி வாழ்ந்தாலும் மீனைச் சமைக்கையில் தாய்மார்கள் உப்புப் போட்டுச் சமைப்பதன் காரணம் என்ன? உப்புக் கடலில் பிறந்து வாழ்கிற மீனின் உடலில் உப்பு ஒட்டுவதில்லை. தப்பான சூழலில் வாழும் இளைஞர்கள் வாழ்விலும் தப்புப்படியாமல் இருந்தால் மகிழலாம். உப்புச் சூழலை மாற்றுவதற்கு மீன் எந்த முயற்சியும் எடுப்பதில்லை. சிந்தை தெளிந்த இளைஞர்கள் தம்மைச் சூழ்ந்துள்ள சமூக அழுக்குகளைக் கழுவித் தூய்மை செய்வதற்காகவே தங்கள் வியர்வை, கண்ணீர், இரத்தம் ஆகியவற்றை வடிப்பார்கள். எல்லோருக்கும் ஒவ்வொரு வகையான ஆற்றலை இறைவன் வழங்கியுள்ளான். அதனைக் கண்டுபிடித்துக் கூர்மைப்படுத்தி வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பு அவன் முயற்சியிலேதான் அடங்கிக்கிடக்கிறது.

**"வான் குருவியின் கூடு வல்லரக்கு;
தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் -
யாம்பெரிதும்
வல்லாமே என்று வலிமைசொல
வேண்டாம்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது"**

என்பது பழம்பாடல்.

தூக்கனாங் குருவிக் கூட்டிற்குள் எத்தகைய தொழில்நுட்பம்! ஒற்றை அலகால் கூடு பின்னி, அந்தக் கூடாகிய வீட்டிற்கு வெளியே முன் அடுக்கிய கதவு ஒன்றும் அமைத்துள்ளது அந்தக் குருவி. உள்ளே தன் முட்டைகளுக்கும் குஞ்சுகளுக்கும் ஊறு நேர்ந்துவிடக்கூடாதென்று கூட்டின் உள்ளே அடியில் பஞ்சும் துணியும் பக்குவமாக வைத்திருக்கிறது. உள்ளே கூடு முழுவதும் ஈரக்களிமண் பூசிக் குளிர்பதனம் செய்திருக்கிறது குருவி. வியப்பின் உச்சம் என்ன தெரியுமா? கூட்டுக்கள் இருக்கும் இருட்டைப் போக்க உள்ளே உள்ள ஈரக்களிமண் பூச்சில் மின்மினிப் பூச்சிகளை ஒட்டவைத்திருக்கிறது. இதேபோலத் தொழில் நுணுக்கம்தான் கரையான் எடுக்கும் புற்றிலும், தேனீக்கள் கட்டும் கூட்டிலும் அமைந்திருக்கிறது. யாரும் கற்றுத் தராமலேயே இந்த நுட்பம் மனிதனை விட அறிவிற் குறைந்த உயிர்களுக்குச் சாத்தியம் என்றால், இளைஞனே! உனக்கு என்னவெல்லாம் முடியும்!

பரிபூரணம் என்பது படைத்தவனுக்கு மட்டுமே சாத்தியம். மனிதர்கள் குறைபாடு உடையவர்கள்தாம். ஆனால் அந்தக் குறையையும் நிறையாக மாற்றிக்கொள்வதில்தான் இளைஞர்களுக்கு வெற்றி இருக்கிறது.

இளைஞனே, உன் வாழ்வின் ஓட்டைகளை ஒரு புல்லாங்குழலின் ஓட்டையாக மாற்றிவிடு. சமூகம் புதுப்புது இராகங்களை வாசித்துக் கொள்ளட்டும். ஊசியில் இருக்கும் சின்ன துவாரம், ஒரு கிழிசல்தான். அந்தக் கிழிசல்தான் மற்றக் கிழிசல்களைத் தைப்பதற்கு ஊசிக்கு உதவியாய் இருக்கிறது.

**பொறியின்மை யார்க்கும் பழியன்று;
அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி**

என்பது குறள்பாட்டன் வீசிய மின்னல் சவுக்கு.

நம்பிக்கை என்பது உள்ளே நிகழும் உயிர்ச் சுவாசம். "Growth by sweat, not by rain" இளைய செடிகளுக்கு இது ஒரு தாரக மந்திரம். விரக்தி, சலிப்பு, ஏமாற்றம் இவையனைத்தும் காற்றில் எழும் தூசிகளே.

இவைகளுக்குப் பயந்து யாரும் சுவாசத்தை நிறுத்திவிடுவதில்லை. ஒருவன் செய்யும் செயலே அவனது உயர்வையும் தாழ்வையும் நிர்மாணிக்கிறது. நபிகள் நாயகம் "செங்கல்லை அடுக்கி வீடு கட்டுகிறவன் உயர்ந்துகொண்டே போகின்றான் கிணறு தோண்டுகிறவன் தாழ்ந்து கொண்டே போகிறான்" என்று குறிப்பிட்டது இளைஞர்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காகும். தன்னம்பிக்கை ஒன்றே உயர்வுக்கு வழி. "தன்னம்பிக்கை உள்ளவன் காலங்கள் செல்வமாகின்றன. தன்னம்பிக்கை இல்லாதவன் செல்வங்கள் காலமாகின்றன."

ஒரு சின்னஞ்சிறிய விதை மண்ணுக்குள் புதைக்கப்படும்போது செத்துவிடுவதில்லை. புவியீர்ப்பு விசையையும் விஞ்சி அது மேலே தலை உயர்த்துகிறது. மரங்கள் எல்லாம் ஒற்றைக்கால் தவசிகள் தாம். உள்ளே இருக்கும் விதை மேலே அழுத்திக்கொண்டிருக்கும் கல், பாறை அனைத்தையும் மீறி வெயிலிலும், மழையிலும், பனியிலும், காற்றிலும் முடங்கிவிடாது, 'ஒற்றைக் காலில் நின்று உயர்வேன்' என்று பிடிவாதமாக வளர்ந்து உயர்கிறது. ஆறறிவு படைத்த இளைஞனே, நீ ஓரறிவு படைத்த மரத்திற்கு முன்பு தோல்வியைத் தழுவலாமா?

**"Say not Right turn or left turn
Say your eyes about turn"**

என்பது ஒரு புகழ்மிக்க ஆங்கிலக் கவிதை. விழிகள் உள்முகமாகத் திரும்பட்டும். உனக்குள்தான் எத்தனை எத்தனை தொட்டனைத்தூறும் ஜீவ ஊற்றுக்கண்கள்! 'சிங்க இளைஞனே, திருப்பு முகம்; திற விழி' என்ற பாவேந்தர் அழைப்பு உனக்குள் கேட்கவில்லையா?

# இளைஞனே இயேசுவில் விழித்தெழு

அருட் சகோதரன் ப. யோண் ஸ்ரனின் சோசை
1ம் வருட இறையியல்,புனித சவேரியார் குருமடம், யாழ்ப்பாணம்.

*குழந்தைக்கு எதிர்காலம் மட்டுமே உள்ளது
முதியோருக்கு இறந்த காலம் மட்டுமே உள்ளது
இளையோருக்கு முக்காலமும் உள்ளது.*

இளமைப்பருவம் ஓர் இனிய பருவம், துடிப்புள்ள பருவம், சுகமான உணர்வுகளை சுமக்கும் பருவம், வளமான கனவுகளை வளர்க்கும் பருவம், கடமைகளையும், உடைமைகளையும் கணிக்கும் பருவம் வாழ்வின் இலக்கிற்கு அச்சாரமாக விளங்கும் பருவம், மற்றெல்லா பருவங்களையும் விட உயிருள்ள பருவமும் உரமூட்டப்படவேண்டிய பருவமும் இதுவே. ஏனெனில் இப்பருவமே எதிர்கால திருச்சபையின் நம்பிக்கையும் நாடித்துடிப்பும் ஆகும். இப்பருவத்தில் இளைஞர்கள் சந்திப்பவையும் சார்ந்து நிற்பவையும் அவர்களை வெகுவாக வேகமாக பாதிக்கின்றன. அவை உரம் ஊட்டுபவைகள் ஆனாலும் சரி, ஊறுவிளைவிக்க கூடியவையானாலும் சரி. இத்தகைய தேர்ந்து தெளியும் செயற்பாட்டில் இவர்களுக்கு அரசியல், அறிவியல், வரலாறு போன்ற பல்வேறு துறைகள் துணைநின்றாலும் இவர்களுக்கு அடிப்படையாகவும், பக்கபலமாகவும் ஆழ்ந்த பொருள் தரக்கூடியதாகவும் இருப்பது ஆன்மீகம் ஒன்றே.

ஆழ்ந்த பொருள் தரக்கூடிய ஆன்மீக வாழ்வை இந்த வருடத்தில் எம் சமுதாய இளைஞர்களுக்கு வாரி வழங்கும் நோக்கோடு எம் தலச் திருச்சபை இவ்வாண்டை (2011) இளைஞர்களுக்கு உரித்தான ஆண்டாக பிரகடனப்படுத்தி இருப்பது மட்டுமன்றி இவர்களுக்கு எமது தாய் திருச்சபையில் முக்கிய ஓர் பங்கு கொடுத்து இவர்களுடைய சமய, சமூக எதிர்கால வாழ்வை பிரகாசம் நிறைந்த ஒன்றாக மாற்ற திட்டங்களை மேற்கொண்டு வருகின்றாள். இவ்வாறான ஓர் உன்னதமான ஆண்டிலே எமது சமுதாய இளைஞர்களின் வாழ்வை அவர்களின் நாளாந்த நடைமுறைகளை நம் மீட்பர் இளைஞன் யேசுவின் வாழ்க்கை பதிவுகளோடு , பிரதிபலிப்புகளோடு ஒப்பிட்டு கொண்டுசெல்ல உதவ வேண்டியதும், வழிகாட்ட வேண்டியதும் கிறிஸ்தவர்களாகிய எம் ஒவ்வொருவருடைய தலையாகிய கடமையாகும்.

## யேசுவும் இளைஞர்களும்

இறைமகன் யேசு தனது பகிரங்க பணியை ஓர் இளைஞனாக அதாவது தனது 30 வயதிலே தொடங்கினார். அவருடைய இளமை துடிப்பும் இறைதந்தையின் மீது கொண்ட இணையற்ற நட்புறவும் இவ்வுலகத்தின் மேல் அவர்கொண்ட ஈடு இணையற்ற அன்பும் இறையரசை இவ்வுலகில் மூன்றுவருடத்துக்குள் நிரந்தரமாக நிலைநாட்ட வழிவகுத்தன. மேலும் அவர் அன்பு, அமைதி, மன்னிப்பு, இரக்கம், சமத்துவம் நிலவும் இறையாட்சி சமுகத்தை இவ்வுலகில் ஏற்படுத்த இளைஞர்களை இறையாட்சிக்குரிய இயக்கமாக உருவாக்கினார். இளைஞர்கள் மேல் அவர்கொண்ட தனிப்பட்ட ஈடுபாடும் அக்கறையும் இதனையே எடுத்துரைக்கின்றன. யேசுவால் தேர்ந்துகொள்ளப்பட்ட 12 அப்போஸ்தலர்களுள் மிகவும் அன்புசெய்யப்பட்டவரான அப்போஸ்தலர் யோவான் (யோவா 20:2) ஓர் இளைஞனே. மேலும் நிறைவாழ்வுக்கான கட்டளைகளை கடைப்பிடித்தவரும் (மத் 19:20) தம்மை பின்பற்ற விரும்பி யேசுவால் அழைக்கப்பட்டவரும் (லூக் 9:59), யேசு அப்பங்களை பகிர்வதற்கு 5 வாற்கோதுமை அப்பங்களையும் 2 மீன்களையும் முன்மாதிரியாகவும் தூண்டுதலாகவும் கொடுத்தவரும் (யோவா 6:9), யேசு கைது செய்யப்படும் போது அவரோடு கைது செய்யப்பட்டவரும் (மாற் 14:51-52) இளைஞர்களே . அத்துடன் யேசு குணப்படுத்திய பேய்பிடித்தவன் (யோவா 4:47-54) மற்றும் பல்வேறு எதிர்ப்புக்கள் மத்தியில் உயிர்ப்பித்த லாசரும் (யோவா 11:7-16) இளைஞனே. இவ்வாறு யேசு தன் பணிவாழ்வில் ஒருபோதும் இளைஞர்களை புறக்கணிக்கவில்லை மாறாக தம்மோடே எந்நேரமும் வைத்துக்கொண்டிருந்தார். இன்றுபோல அன்றும் வேலையில்லா திண்டாட்டத்தில் பாதிக்கப்பட்ட இளைஞர்களை புரிந்துகொண்டு எந்நேரத்திலும் வேலைகொடுப்பவராக காணப்பட்டார். மேலும் சமூகத்தில் பெரியவர்களால் ஒதுக்கப்பட்டு கடைநிலைக்கு தள்ளப்பட்ட இவர்களை முதன்மைப்படுத்துபவராக வாழ்ந்தார் (மத் 20:1-4). இவர்களின் நிலையில் இருந்து விடுபட விழிப்பாய் இருக்கவும் திறமைகளை வளர்த்துக்கொள்வதன் அவசியத்தை (மத் 25:14-30) உவமைகள் வழியாக எடுத்துரைத்தார். இளைஞர்களை தம்மிடம் அழைத்து பயிற்சி தருவதற்கு தடையாக இருந்தவர்களை சாடினார் (மாற்10:13-16).

## திருச்சபையும் இளைஞர்களும்

இளைஞர்களே அன்றைய இறையாட்சி இயக்கத்தின் மையமாகவும் முன்னெடுத்து செல்கின்ற வீரர்களாகவும் இருந்தார்கள் என்பது இதில் இருந்து நமக்கு புலனாகின்றது. ஆனால் இன்றைய காலகட்டத்தை நாம் பார்க்கின்றபோது திருச்சபையில் இளைஞர்களின் பங்கும் பணியும் மிகவும் குறைந்துபோன ஒன்றாகவே காணப்படுகின்றது. பங்குமட்டங்களிலும் சரி மறைமாவட்ட மட்டங்களிலும் சரி முன்னின்று பங்குத்தந்தையுடனும் அருட்பணியாளர்களுடனும் இணைந்து திருச்சபையின் வளர்ச்சிக்காக மறையின் வளர்ச்சிக்காக உழைக்க வேண்டிய இளம் உள்ளங்கள் இன்று தமக்கும் திருச்சபைக்கும் எதுவித தொடர்பும் ஈடுபாடும் இல்லாதவர்கள் போன்று தூர நின்று வேடிக்கைபார்ப்பவர்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள். பல சந்தர்ப்பங்களிலே திருச்சபையும் இளைஞர்கள் மட்டில் அக்கறையீனமாக இருந்துவந்துள்ளதோடு காலத்தின் போக்கிற்கேற்ப தனது செயற்பாடுகளையும் திட்டங்களையும் நவீனமயப்படுத்தி இளைஞர்களை தம் வசப்படுத்த தவறி இருக்கின்றது. இதனால் எம் இளைஞர்கள் பல வித சிக்கல்களில் அகப்பட்டு அரசியலில் அடிமைகளாகவும் பொருளாதாரத்தில் புறந்தள்ளப்பட்டவர்களாகவும், சமய சமூக பண்பாட்டு தளங்களில் அக்கறையற்றவர்களாகவும் வாழ்கின்றார்கள். இதனால் இவர்கள் பல்வேறுபட்ட இக்கட்டான சூழ்நிலைகளுக்கு தள்ளப்பட்டு மன அமைதியையும் நிம்மதியையும் இழந்து தமக்குள் தாமே முரண்பட்டு தம் மனம்போன போக்கிலே நிரந்தரமற்ற இன்பத்தால் ஈர்க்கப்பட்டு தமது முகவரிகளை தொலைப்பது மட்டுமல்லாமல் சமுதாயத்தின் சீர்குலைவுக்கு காரணிகளாகின்றார்கள். எனவே இவர்களுடைய வாழ்க்கை நலனில் அக்கறை கொண்டு இவர்களுடைய வாழ்வை இனிய வாழ்வாக இறையேசுவின் வழியில் வாழ்கின்ற வாழ்வாக மாற்ற வேண்டியது கிறிஸ்தவர்களாகிய எம் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும். விசேடமாக இந்த புதிய ஆண்டிலே இளைஞர்களை தம்மோடும் பிறரோடும் இறையோடும் உரையாடலுக்கும் உறவாடலுக்கும் அழைத்துசெல்வதோடு மட்டுமல்லாது ஆன்மீக ரீதியில் ஈர்க்கக் கூடியதாகவும் நாடிவரக்கூடியதாகவும் சமய சடங்குகளை இவர்களுக்கென பங்கு மட்டத்திலும் மறைமாவட்ட மட்டத்திலும் செயல்படுத்தி ஆன்மீக தேடலுக்கு அழைத்து செல்ல வேண்டும். மேலும் இவர்களுக்கு வழங்கப்படும் ஆன்மீக செயற்பாடுகள் ஓர் அக-புற தேடலுக்கு இட்டுச்சென்று சமுதாய சூழலையும் தங்களையும் தூய்மைப்படுத்தும் செயல்பாட்டு சிந்தனைக்கு கொண்டுசெல்ல வேண்டும்.

மேலும் இளைஞர் பணியில் தம்மை ஈடுபடுத்துவோர் நல்லாயன் யேசுவின் பண்புகளை தம் வாழ்வில் தெளிவாக கொண்டிருக்க வேண்டும் (யோவா10:1-8). நல்லாயன் தம் ஆடுகளை நன்றாக அறிந்திருப்பது போல் அவையும் அவரை அறிந்திருக்கும். இவ்வாறு இருவழி அறிதல் புரிதலுக்கு இட்டுச்சென்று உறவை ஆழப்படுத்தி வலுப்பெற செய்கின்றது. மேலும் எம்மாவுஸ் சீடர்களின் நிகழ்வு (லூக் 24:13-35) குழம்பிய நிலையில் பிரச்சனைகளில் இருந்து தப்பித்துகொண்டு செல்லும் சீடர்கள் இன்றைய இளைஞர்களை பிரதிபலிக்கின்றார்கள். இவர்களுள் எண்ணற்ற வினாக்கள் விடைகாண துடிக்கின்றன, ஏராளமான புதிர்கள் விளக்கத்திற்காக காத்திருக்கின்றன இந்நிலையில் இவர்களை வழிநடத்துவோர்

(தொடர்ச்சி 6ம் பக்கம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

## வடக்கு கிழக்கு மாணவர்களுக்காக புனித. வளனார் கல்லூரியின் நன்கொடை

வடக்கு கிழக்கு மாணவர்களுக்காக ஒரு மில்லியன் ரூபா பெறுமதியுடைய சைக்கிள்களை கொழும்பு புனித. வளனார் கல்லூரி நன்கொடையாக வழங்கியுள்ளது. இக் கல்லூரியின் அதிபர் அருட்பணி. சில்வெஸ்ரர் அடிகளின் முன் முயற்சியில் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகளின் பங்களிப்பில் கிறிஸ்துபிறப்பு காலப்பகுதியில் இதற்கான பணத்தினை சேகரித்து நூறு சைக்கிள்கள் வாங்கப்பட்டன. 06.01.2011அன்று இச் சைக்கிள்கள் மேற்படி நோக்கத்திற்காக அதிவணக்கத்திற்குரிய கர்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பேராயர் அவர்கள், வடக்கு கிழக்கு மாணவர்கள் பாலான இக்கல்லூரியின் அக்கறையையும் தாராள உள்ளத்தையும் பாராட்டினார்.

## முறையான உடையணிய முறையிடும் கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஒன்றியம்

ஜனவரி 8, 2011 அன்று நடைபெற்ற கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஒன்றியம், திருவழிபாட்டு நிகழ்வுகளில் அதன் புனிதத்தன்மையை உணராது ஒருசில கத்தோலிக்க பொதுநிலை விசுவாசிகள் மிகவும் அநாகரீக, மரியாதையில்லாத நிலையில் ஆடைகளை அணிந்து வரும் செயலை மிகவும் வேதனையுடனும் மனவருத்தத்துடனும் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த வேதனையான நிகழ்வுகள் ஆலய திருமணங்களிலும், ஆலய திருவிழாக்களிலும் மற்றும் ஞாயிறு திருப்பலிகளிலும் அரங்கேறுகின்றன. எல்லாம் வல்ல இறைவனின் பிரசன்னத்தையுடைய வழிபாட்டு இடம் என்பதை இப்படியானவர்கள் உணர தவறுவதோடு இது ஏனையவர்களுக்கு இடறல் மட்டுல்ல எமது ஆண்டவரும் மீட்பருமான இயேசுக்கிறிஸ்து பறைசாற்றிய இறையாட்சியின் மதிப்பீடுகளுக்கு எதிர்மாறாகவும் விளங்குகிறது.

இப்படியான மரியாதையில்லாத ஆடைகளை அணிபவர்கள் விகாரைகள், கோயில்கள் மற்றும் பள்ளி வாசல்களுள் நுழைய தடைசெய்யப்படும் அதேவேளை எமது ஆலயங்களில் மட்டும் இவர்களை சகித்துக்கொண்டு நுழைய விடுவது துரதிஷ்டவசமானது.

அனைத்து வேளைகளிலும் குறிப்பாக திருவழிபாட்டு நிகழ்வுகளில் பங்கெடுக்கும் போது மரியாதையான, நாகரீகமான உடைகளை எல்லா பொதுநிலை விசுவாசிகளும் அணிந்துவர கத்தோலிக்க தேசிய பொதுநிலையினர் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கின்றது.

இது விடயமாக ஓர் ஒழுங்கு ஆவணத்தை வெளியிட்டு அதனை கடுமையாக அமுல்படுத்தவும் எமது திருவழிபாட்டு நிகழ்வுகளில் பங்கெடுக்கும் பிற சமய விசுவாசிகள் உட்பட அனைத்து பொதுநிலையினரும் அதனை கடைப்பிடிக்கவும் செயல்முறையை உருவாக்க திருச்சபைத் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுக்க அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## புனித வின்சென்டி போல் சபையின் தேசிய பொதுக்கூட்டம்

தகவல் : P. இராயப்பு, விடத்தல்தீவு

புனித வின்சென்டி போல் தேசிய சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 06.12.2010அன்று பொதுநிலையினர், குடும்பப்பணிகளுக்கு பொறுப்பான ஆயர் அதி.வண. வின்சன்ட் பெர்ணான்டோ தலைமையில் கொழும்பில் திருத்தந்தை 16ம் பவுல் மண்டபத்தில் திருப்பலியுடன் ஆரம்பமாகியது.

தேசிய சபையால் வழங்கப்பட்ட உதவிகள் மன்னார் மறைமாவட்ட மத்தியசபையால் தேவையாளர்களுக்கு, பொதுநிலையின் குடும்பப்பணி இயக்குனர் அருட்பணி A. செபமாலை அவர்களின் அனுசரனையில் பயன்படுத்தப்பட்டிருப்பது பற்றி வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. பல்வேறு மறைமாவட்டங்களிலிருந்து சபையின் நிர்வாக உறுப்பினர்கள் சமூகமளித்திருந்த இக்கூட்டத்தில் மன்னார் வின்செண்டி போல் மத்திய சபைத் தலைவி திருமதி. A. ஏபிரகாம் சோசை, செயலாளர் திருமதி. கிறிஸ்பி குரூஸ், பொருளாளர் திரு. S. எட்வேட் மற்றும் மன்னார் பந்தி நிர்வாகி திரு. T. மரியதாஸ் ஆகியோருடன் பங்குகளின் சபைத்தலைவர், செயலர் என மன்னார் மறைமாவட்டத்திலிருந்து 11 உறுப்பினர் கலந்துகொண்டனர்.

## யாழ் மறைமாவட்டத்தில் நடைபெற்ற தமிழ் சிங்கள இளையோரை இணைக்கும் செயலமர்வு

தமிழ் சிங்கள இளையோரிடையே நட்புறவை ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கையின் தேசிய கத்தோலிக்க இளைஞர் மன்றமும் யாழ் மறைமாவட்டமும் இணைந்து நிகழ்வொன்றினை நடாத்தின. 53வது தேசிய கத்தோலிக்க இளைஞர் கூட்டமானது கடந்த தை மாதம் 21 - 23 நாட்களில் யாழ். பண்டத்தரிப்பு பத்திமா தியான மையத்தில் இடம்பெற்றது. தென் பகுதியிலிருந்து வருகை தந்திருந்த சிங்கள இளையோர் வடபகுதி தமிழ் இளையோரை சந்தித்து அவர்களின் போர்க்கால பாதிப்புகள், சோகங்கள், அனுபவங்கள் அனைத்தையும் கேட்டறிந்தார்கள். யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு.தோமஸ் சௌந்தரநாயகம் அவர்கள் இந்நிகழ்வில் பங்கெடுத்த இளைஞர் மத்தியில் உரையாற்றும் போது, "போர், அழிவுகளையும் மரணங்களையும் விளைவித்து மக்கள் மத்தியிலே இன பகைமையை விதைத்துச் சென்றுள்ளது. இது எல்லா சமூகங்களின் இளையோரின் வாழ்வை பாதித்துள்ளது.



இதுவே எங்களுக்கு போதும். எங்களுக்கு இனி இவை கொஞ்சமும் தேவையில்லை" என்று கூறினார். போர் தரவுகளின் படி மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற யுத்தத்திலே கொல்லப்பட்டோரில் 90சதவீதமானோர் தமிழ், சிங்கள இளைஞர்களாவர். ஆயர் தொடர்ந்து உரையாற்றுகையில், "இளைஞர்கள் எமது எதிர்காலம் மட்டுமல்ல, எமது நிகழ்காலமும் கூட; இலங்கைத்திருநாட்டில் யாழ்ப்பாணமும் ஒருபகுதியாகும். ஆகவே இந்த இடத்தில் நீங்கள் மகிழ்ந்திருக்கலாம்" என்றுரைத்து சிங்கள இளையோரை தமிழ் இளையோருடன் சுதந்திரமாக கலந்துரையாட ஊக்குவித்தார்.

## வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு உதவிய கறிற்றாஸ் தன்னார்வ பணியாளர்

நாட்டின் மத்திய, கிழக்கு பிரதேசங்களில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை கறிற்றாஸ் அமைப்பு தன்னார்வப் பணியாளர்களை கொண்டு உதவி புரிந்துள்ளது. கறிற்றாஸ் அலுவலர்கள், குருக்கள் பங்குகளிலே தன்னார்வ பணியாளர்களை ஒழுங்கு செய்து நோயாளிகளை, வயோதிபரை கவனிக்க ஏற்பாடு செய்தனர். "இந்த மக்களுடைய நிலையையும் துன்பத்தையும் வார்த்தைகளால் சொல்லமுடியாது. இது தாங்கமுடியாத ஒன்று" என மட்டக்களப்பு



மாவட்ட கறிற்றாஸ் இயக்குனர் அருட்பணி. சிறிதரன் சில்வெஸ்ரர் கூறினார்.

# உலகத்திருச்சபை செய்திகள்

## "அமைதி நிலவ மனித உரிமைகளை மதிப்பது அவசியம்" - திருத்தந்தை

அமைதியை நிலைநாட்ட மனித உரிமைகளை மதிப்பது இன்றியமையாதது. நீதியான சமூக அமைப்பையும் அமைதியையும் நிறுவிட மனிதனின் மிக உன்னத மாண்பை மதிப்பது மிகவும் அவசியம் என்பதில் தனக்கு எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை என்று திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் ஈரான் அரசுத் தலைவர் மஹ்மௌத் அஹமதிநெஜாத்துக்கு அனுப்பிய கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார். "பன்னாட்டு அளவில் அமைதி, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்காக ஜப்பான் நாடு ஆற்றி வரும் பணிகளை பெரிதும் பாராட்டுகின்றேன். ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி நகரங்களில் அணுக்குண்டுகள் வீசப்பட்டதன் 75ம் ஆண்டு நினைவு கூரப்படும் இவ்வேளையில் உலகில்



அணு ஆயதக் களைவு குறித்த ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் உணரப்பட வேண்டும்" என்று வத்திக்கானுக்கான ஜப்பான் நாட்டின் புதிய தூதர் ரிதேக்காசு யாமாகுசியிடம் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

## அமெரிக்காவில் அதிகாரபூர்வ முதல் திருத்தலம் சாம்பியன

அமெரிக்காவின் விஸ்கான்சின் பகுதியில் அன்னை மரியா தோன்றிய காட்சிகளை அம்மறைமாவட்டம் முதன்முறையாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. 1859ம் ஆண்டு சாம்பியன் எனும் இடத்தில் அன்னை மரியா ஆடில் ப்ரிசே என்ற பெண்ணுக்கு மூன்று முறை தோன்றி, "நானே விண்ணக அரசியான மரியா. பாவிகளின் மனந்திரும்புதலுக்காக நான் வேண்டி வருகிறேன். நீயும் இதே கருத்துக்காக வேண்டுவது என் விருப்பம்" என்று அன்னை மரியா சொன்னதாக வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. இவ்வறிவிப்பைத் தொடர்ந்து, சாம்பியன் திருத்தலம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் அதிகாரப்பூர்வமான முதல் திருத்தலமாகிறது.

## இடம்பெயர்ந்தோருக்கு உதவ வத்திக்கான் வேண்டுகோள

தங்கள் நாடுகளை விட்டு கட்டாயமாக வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகும் இடம்பெயர்ந்தோரின் தேவைகளைக் கவனிப்பதற்கென எந்த விதத் தனிப்பட்ட சமூக நிறுவனங்களும் இல்லை என்பதால் அம்மக்களுக்கு அதிகப்படியான ஆதரவு தேவைப்படுகின்றது என்று வத்திக்கான் இடம்பெயர்ந்தோர் அவைத் தலைவர் பேராயர் அந்தோனியோ மரிய வேலியோ கூறினார். உலகின் ஏறக்குறைய 21.40 கோடி இடம்பெயர்ந்தோரில் பாதி பேர் பெண்கள் என்று சர்வதேச கறிற்றாஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

## மரபுரீதியான குடும்ப விழுமியங்களைப் பாதுகாப்பதற்கு வத்திக்கான் சக்திவாய்ந்த கூட்டணி

"தற்சமயம் உலகில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள உலகப்போக்குகளிலிருந்து மரபுரீதியான குடும்பம் மற்றும் மனித விழுமியங்களைப் பாதுகாப்பதற்கு வத்திக்கான் சக்தி வாய்ந்த கூட்டணி. இவ்விழுமியங்களைப் பாதுகாப்பதற்கு கத்தோலிக்க மற்றும் ஆர்த்தடாக்ஸ் திருச்சபைகள் சேர்ந்து செயலாற்றி வருகின்றன. இச்செயல்பாட்டிற்கான புதிய வாய்ப்புக்களைத் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் உருவாக்கி வருகிறார்" என்று இரஷ்ய ஆர்த்தடாக்ஸ் சபைத் தலைவர் முதுபெரும் தந்தை கிரில் கூறினார்.

## அணு ஆயுதக் குறைப்புக்கு அமெரிக்க ஆயர்கள் வலியுறுத்தல்

அணு ஆயுதக் குறைப்பு பற்றி அமெரிக்க ஐக்கிய நாட்டின் நாடாளுமன்றத்தில் நடைபெற்றுவரும் விவாதங்கள் நல்ல செயல்பாடுகளை விளைவிக்க வேண்டுமென அந்நாட்டின் ஆயர்கள் வலியுறுத்தி வருகின்றனர். அமெரிக்க அரசுத் தலைவர் பராக் ஒபாமா, இரஷ்ய அரசுத் தலைவர் திமித்ரி மெத்வெதேவ் ஆகிய இருவரும் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கையெழுத்திட்ட ஓர் ஒப்பந்தத்தில் உலகின் அரசுகள் ஒவ்வொன்றும் அணு ஆயுதங்களை பத்து விழுக்காடாவது குறைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## எயிட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டின் அவசியம் குறித்த திருத்தந்தையின் கருத்துக்கு காரித்தாஸ் வரவேற்பு

திருத்தந்தை, திருச்சபை, நமது காலத்திற்கான அடையாளங்கள் ஆகியவை குறித்த திருத்தந்தையின் உரையாடல்கள் அடங்கிய 'உலகின் ஒளி' என்ற புத்தகத்தில், எய்ட்ஸ். எச்.ஐ.வி பிரச்சினைகளைச் சரிவர அணுகி, அவற்றைத் தீர்ப்பதற்கு உலகம் இன்னும் அதிகம் முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று திருத்தந்தை கூறியுள்ளதைச் சுட்டிக் காட்டிப் பேசிய காரித்தாஸ் அமைப்பின் செயலர் லெஸ்லி - ஆன் நைட், இப்பிரச்சினை குறித்த திருத்தந்தையின் கூற்றுகள் அவரது அக்கறையைப் பெரிதும் காட்டுகின்றன என்று கூறினார். 165 நாடுகளில் பல்வேறு துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள காரித்தாஸ் அமைப்பு, நூற்றுக்கும் அதிகமான நாடுகளில் எச்.ஐ.வி எய்ட்ஸ் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ளது.

## 2011ல் சான் மரினோ குடியரசுக்கு திருத்தந்தை திருப்பயணம்

திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் வருகிற ஜுன் மாதத்தில் சான் மரினோ மொந்தோ.ஃபெல்த்ரோ மறைமாவட்டத்திற்குத் திருப்பயணம் மேற்கொள்வார் என்று வத்திக்கான் பத்திரிகை அலுவலகம் அறிவித்துள்ளது. 2011ம் ஆண்டு ஜுன் 19 அன்று காலை சான் மரினோ செல்லும் திருத்தந்தை பிற்பகலில் இத்தாலியின் மொந்தோ.ஃபெல்த்ரோ பகுதிக்குச் செல்வார். சான் மரினோ குடியரசின் எல்லைப் பகுதியிலுள்ள மொந்தோ.ஃபெல்த்ரோ மறைமாவட்டம் எட்டாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. இதிலுள்ள 69 பங்குகள் இத்தாலியையும் 12 பங்குகள் சான் மரினோவையும் சேர்ந்தவை.

## எண்ணிலக்க உலகம்: 2011ம் ஆண்டின் உலகச் சமூகத் தொடர்புகளுக்கான கருப்பொருள்

"டிஜிட்டல் உலகத்தில் உண்மை, அறிவிப்பு மற்றும் வாழ்க்கையின் நம்பகநிலை" என்பதை 2011ம் ஆண்டின் 45வது உலகச் சமூகத் தொடர்பு நாளுக்கானத் தலைப்பாக 16ம் ஆசீர்வாதப்பா தேர்ந்தெடுத்துள்ளார். திருத்தந்தை எல்லா விதமான தொடர்புச் சாதனங்களிலும் மனிதன் மையப்-படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தையே இதன் மூலம் திருத்தந்தை வலியுறுத்த விரும்புகிறார் என்று வத்திக்கான் சுட்டிக் காட்டியுள்ளது. புதிய தொழில்நுட்பங்கள் பெருமளவில் ஆதிக்கம் செலுத்துகிற-சிலவேளைகளில் வரையறுக்கிற இக்காலத்திலும் கூட ஒருவரின் வாழ்வுச் சாட்சியத்தின் மதிப்பு மிகவும் முக்கியம் என்பதையும் இத்தலைப்பு வலியுறுத்துகிறது. என்றும் வத்திக்கான் கூறியது. உண்மை, புதிய தகவல் தொழில்நுட்பங்களில் உறுதியான மற்றும் மாறாத கூறாக இருக்க வேண்டும் என்றும், உண்மை மீதான ஈடுபாடே ஊடகத்துறையில் வேலை செய்யும் எல்லாருக்கும் அடிப்படைத் தளமாக அமைகின்றது என்றும் இத்தலைப்பு வலியுறுத்துகிறது. இந்த 45வது உலகச் சமூகத் தொடர்பு நாளுக்கானத் திருத்தந்தையின் செய்தி, 2011ம் ஆண்டு ஜனவரி 24 அன்று ஊடகவியலாளரின் பாதுகாவலராகிய புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் விழாவன்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு தரும் வார்த்தை

# இறைவனுடைய சாயலில்

அருட்பணி. மி.அமலதாஸ் சே. ச.



இறைவனை நாம் நேரடியாகக் காண்பதில்லை. அதனால் அவரைப் பற்றிய நம் உருவங்கள் பெரும்பாலும் நம் உலக அனுபவத்தைச் சார்ந்தே இருக்கின்றன. ஓர் ஊர் அல்லது ஒரு குழுத்தலைவர் சாதாரண மக்களிடமிருந்து ஓரளவு அப்பாற்பட்டவராக இருக்கின்றார். அவருக்குப் பல அடியாட்கள். அவருக்கும் மக்களுக்கும் இடையே பல இடையாட்கள். இன்றுகூட ஒரு மந்திரியையோ அல்லது ஓர் அரசாங்க அதிகாரியையோ நேராக அணுக நாம் தயங்குகிறோம். நம்மை அறிமுகம் செய்து வைக்க ஓர் இடையாளைத் தேடுகின்றோம். சிபாரிசு இல்லாமல் இன்று எதையும் சாதிக்க இயலாத சூழ்நிலை. இந்த அதிகாரிகளைச் சுற்றி எப்பொழுதும் ஒரு கூட்டம் நிற்கும். பிறரைவிட உயர்ந்தவர்களாக அவர்கள் தங்களை நினைத்துக் கொள்வார்கள்.

இதுபோன்ற ஒரு சமூகப்பண்பாட்டுச் சூழ்நிலையில் நாம் இறைவனையும் இவர்களைப் போன்ற ஒரு தலைவராகவே பாவிக்கிறோம். எல்லாவற்றையும் படைத்தவர். எல்லாருக்கும் மேலானவர். அவர் ஏவல்களை நிறைவேற்ற ஒரு ஆவிப்படையே உண்டு. மிக்கேல் அவர்களுக்குத் தலைவன். இப்படிப்பட்ட இறைவனை நினைத்தாலே நம் உள்ளத்தில் தோன்றுவது பணிவும் பயமும்தான். அவரிடம் நேரடியாகப் பேச நமக்கு துணிவில்லை. வாழ்வின் ஒவ்வொரு படிக்கும் பணிக்கும் பாதுகாவலர்களைத் தேடிக்கொள்கின்றோம். மற்ற சமயங்களில் தேவர்களும் தேவதைகளும் இப்பணியைச் செய்கின்றனர். இறைவன் நமது கண்ணோட்டத்தில் கொஞ்சம் எட்டியே நிற்கின்றார். நடைமுறையில் நமது கவனம் இறைவனைப் பொருட்படுத்தாது அவரின் இடையாட்களையே சுற்றி வருவதில் வியப்பில்லை.

ஆனால் விவிலியத்தில் நாம் காணும் இறைவன் இப்படிப்பட்டவர் அல்லர். "இறைவன் மனிதரைத் தம் சாயலில் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்" (தொ.நூ 1:27) என்று கூறுகின்றது விவிலியம். இறைவன் தனது ஆவியை மனிதர்கள் மீது ஊதி உயிர் தருகின்றார் (தொ.நூ 2:7) அவர்களை ஒரு தோட்டத்தில் இருத்தி இயல்பாக உரையாடுகின்றார் (தொ.நூ 3:8). இறைவனுடைய சாயலாக இவ்வுலகை மனிதர்கள் ஆளுகின்றார்கள் (தொ.நூ 2:16). "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக; மனுவைப் படைத்தான் தனை வணங்க" என்று கூறும் தமிழ் மரபு. இந்த ஆளுமையையும் சுதந்திரத்தையும் மனிதர் தவறாகப் பயன்படுத்துகின்றனர். இறைவனுடைய சாயலாக மட்டுமன்றி இறைவனாகவே தங்களைப் பாவித்துக் கொள்கின்றனர். உலகின்மேலும் பிறர்மேலும் தங்கள் அதிகாரத்தைக் காட்டுகின்றார்கள். அதனால் இறைவன் மனிதரை ஒதுக்கிவைக்கின்றார். மனிதர் தம் சுதந்திரத்தையோ ஆக்கசக்தியையோ முழுமையாக இழந்துவிடவில்லை. ஆனால் இறைவனுடைய துணையின்றி அவற்றை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்த இயலாது தவிக்கின்றனர். இறைவனைப் பற்றிய மனிதரின் கண்ணோட்டத்திற்கும், இறை மாண்பையும் அதிகாரத்தையும் தமதாக்க முயலும் அவர்களது தேடலுக்கும் ஒரு மாற்றாக வருகின்றார் இயேசு. இறைவனாய் இருந்தும் மனிதனாகப் பிறக்கின்றார். பவுல் கூறுவதுபோல்:

"கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்" (பிலி 2:6-8).


இயேசுவில் இறைவனுக்கும் மனிதருக்கும் இடையே நிலவிய இடைவெளி மறைகிறது. இறைவன் இம்மண்ணிலே நடக்கின்றார். இயேசு ஏழைகளோடும் ஒடுக்கப்பட்டவர்களோடும் உரையாடிப் பந்தி அமர்கின்றார். பாவிகளை மன்னித்து, நோயாளிகளைக் குணமாக்கி, பசித்தோருக்கு உணவு அளித்து, இறந்தோர்க்கு உயிர் கொடுத்து இறைவனுடைய மன்னிக்கும், உயிரளிக்கும், முழுமையாக்கும் அன்பை வெளிப்படுத்துகின்றார். இயேசு இறைவனின் சாயலில் மனிதனாகவும் மனிதனின் சாயலில் இறைவனாகவும் விளங்குகின்றார். இறைவனைப்போல் ஆகவேண்டும் என்ற மனித வேட்கை இயேசுவில் முழுமை அடைகிறது. இத்தகுதியை அடைய தங்கள் சுதந்திரத்தைக் கீழ்ப்படியாமை ஆக்கி மனிதர் முயன்றனர். அதே சுதந்திரத்தால் கீழ்ப்படிந்து அதே தகுதியை இயேசு அடைகின்றார். இறைத்தன்மையைப் பற்றிக்கொள்ளாமல் சுதந்திரமாகத் தாழ்மையோடு அதைக் கையளிக்கின்றார். அதையே இறைவனின் கொடையாக மீண்டும் பெறுகின்றார். "எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்" (பிலி 2:9).

மீண்டும் தான் பெற்ற இந்த இறைத்தன்மையை – சாயலை - இயேசு தனக்கெனப் பற்றிக்கொள்ளவில்லை; மாறாக மனிதர் எல்லாருக்கும் பகிர்ந்தளிக்கின்றார்.

"இவரது நிறைவில் இருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம்" என்று கூறுகிறார் யோவான் (1:16). "கடவுளின் ஆவி உங்களுள் குடிகொண்டிருந்தால், ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள்... கடவுளின் ஆவியால் இயக்கப்படுபவர்களே கடவுளின் மக்கள். மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கும் மனப்பான்மையை நீங்கள் பெற்றுக் கொள்ளவில்லை. மாறாக கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக் கொண்டீர்கள்... நாம் பிள்ளைகளாயின் உரிமைப்பேறு உடையவர்களாக இருக்கிறோம்" (உரே 8:9, 14-15, 17). இயேசுவில் இறைவன் மனிதனாகின்றார். இறைத்தன்மை அதிகாரத்தில் அல்ல; பணிவிலும் தன்னையே கையளித்தலிலுமே அடங்கியிருக்கின்றது என்று காட்டுகின்றார். மனிதர்களை உயர்த்தித் தன் பிள்ளைகள் ஆக்குகின்றார். இவ்வாறு படைப்பில் அவர்கள் பெற்ற இறைச் சாயலை முழுமைப்படுத்துகின்றார். இயேசுவில் இறைவனுடைய சாயல் மனிதர்களுடையது ஆகின்றது; இறைவனுக்கும் மனிதருக்கும் உடையே உள்ள இடைவெளி மறைகின்றது.

# நினைவலைகளில் மங்காத தீபம் அருட்பணி. தோமஸ் அடிகளார்

அருட்சகோதரி மேரி றொபேட்சினி,
செபமாலைக் கன்னியர்மடம்,
பட்டித்தோட்டம், மன்னார்.



அழகுக்கே பொருள் சொல்லக்கூடிய அமைதியான உறைவிடம் கொண்ட பாண்டியத்தாழ்வு சிற்றூர் யாழ் நகரின் அருகில் இருக்கிறது. நடுத்தரக் குடும்பத்தில் ஒன்றாக வாழ்க்கை நடாத்திய திரு. வஸ்தியாம் பிள்ளையின் குடும்பம் அன்பின் பிணைப்பிலே விசுவாசத்திலும் இறையன்பிலும் நெறிதவறாது மரியன்னையின் அன்பிலும் அரவணைப்பிலும் தம்மை முழுவதுமே கையளித்து வாழ்ந்த சீரியதொரு குடும்பம்.

அன்றொருநாள் தன் பொன்வண்ணக்-கதிர்களைப் பரப்பியபடி ஆதவன் தலையைத் தூக்கிப் பாண்டியந்தாழ்வை எட்டிப்பார்த்தான். இரண்டாவது செல்வத்தின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த திரு. வஸ்தியாம்பிள்ளையின் உள்ளத்தில் ஆயிரம் பறவைகள் சிறகடித்துப் பறந்தன. உள்ளே தனக்கு வரப்போகும் குழந்தை ஒரு பெண்ணாக இருக்க வேண்டும். திருமதி . வஸ்தியாம்-பிள்ளை (லூசி) செபித்துக்கொண்டிருந்தார். செய்தி கேட்ட உறவினர் முற்றத்திலே ஒன்றுகூடினர். ஆயிரம் ஆயிரம் கனவுகளுடன் காத்திருந்த கூட்டத்திற்கு வீட்டினுள்ளே கேட்டதே "குவா குவா" சத்தம். ஓர் ஆண்மகவு பங்குனித் திங்கள் 7ம் நாள் 1886ம் ஆண்டு பிறந்தது. பிறந்த அன்றே நல்லடக்கம் என்று நம்பிக்கை கொள்ளும் அளவுக்கு எலும்புருவைக் கொண்டிருந்த பச்சிளங்குழந்தை மூச்சு விடுவதற்கே தொல்லைப்பட்டது. அன்றே திருமுழுக்கு அளித்துவிட பங்குக்குரு அழைக்கப்பட்டார். ஒரு சில மணித்துளிகளில் இறக்கப்போகின்ற குழந்தைக்கு அருகிலுள்ள காவலராம் புனித அந்தோனியாரின் நாமம் சூட்டப்பட்டது. பலவீனர்களைக் கொண்டு பலமான காரியங்களைச் செய்வேன் என்ற இறைவனின் வார்த்தை அந்தோனியில் செயல்வடிவம் பெற இருந்தது இறைசித்தம் என்பது அன்று யாருக்குத் தான் புரிந்தது.

அந்தோனி ஆலமரமாய் ஆன்மீகத்தில் உயர்ந்திட மரியன்னை தன் அன்புமகனாகிய நற்கருணை நாதரின் அன்புப் பித்தனாக வாழ வழிகாட்டிவிட்டார். சிறுவன் வளர்ந்தான். பல இன்னல்கள் மத்தியில், தந்தை வஸ்தியாம் பிள்ளையின் எதிர்ப்பையும் வென்று அமலமரித் தியாகிகள் சபையில் குருவாக வரவேண்டுமென்று இணைந்துவிட்டார். 1912ம் ஆண்டு அருட்தந்தை. தோமஸ் அ.ம.தி. ஆனார். இறைவனில் கொண்ட குழந்தைக்குரிய நம்பிக்கையுடன் வீரவிசுவாசத்தைப் படைக்கலமாகவும் தாழ்ச்சியையும் அன்பையும் மார்புக் கவசமாக கொண்டு வாழ்ந்தோருக்கும் காண்போருக்கும் இறைமயத்தை கொடுக்கும் மனிதத்தில் புனிதனாக, நடமாடும் புனித மனிதனாக 78 ஆண்டுகள் மண்ணுலகில் உயிர்வாழ்ந்தார். 46 ஆண்டுகள் மறைந்து விட்ட எம் தந்தையின் நினைவு நாளில் நன்றியுடன் அவரது வாழ்வை சிந்திக்க வேண்டியவர்கள் நாங்கள். தந்தையைப்போல சேயர்கள் நாமும் ஆன்மீகப் படைக்கலம் தாங்கி சக்திவாய்ந்த வாழ்வின் வழி எதிரியான சாத்தானுடன் போர்புரிய தந்தை கையாண்ட ஆன்மீக செல்வங்களை கையாள நாம் தூண்டப்பட வேண்டியவர்கள் என்பதை ஒவ்வொரு கணப்பொழுதும் உணர்த்திட விளைவோம்.

"பிள்ளைகளே காட்டாறுபோல் பாவவெள்ளம் பாய்ந்து வருகிறது. அணைபோடுங்கள்" என்ற தந்தை தோமசின் தீர்க்க தரிசன வார்த்தைகளை நாம் கேட்டு பதில் கொடுக்க முயன்றிட தந்தையின் பாதச்சுவடுகளில் தளம் பதிப்போம்.

"இத்தகைய பேய் செபத்தினாலும், தபத்தினாலுமன்றி வேறெதனாலும் வெளியேறாது" என்ற மீட்பர் யேசுவின் வார்த்தைக்கு பதில் கொடுத்த தோமஸ் அடிகளாரின் வாழ்வில் நாமும் சங்கமிக்க, பலனளிக்கவே அவரது விண்ணக் பிறப்பின் நாள், அன்பின் செய்திகளாக எம்மையும் சந்திக்கட்டும். சிந்தித்து செயலாக்கம் கொடுத்து இறைவனை உலகம் அறிந்திட வேண்டுமென்று ஆசிப்போம்.

(செபமாலைக் கன்னியர் ஸ்தாபகர்)

# எம் ஸ்தாபகரின் மௌன சிதறல்கள்....

விருது வாக்கியங்கள் ஏழு

சிப்பிக்குள் முத்துப் போல
சிற்றூராம் பாண்டியந் தாழ்வில்
சிறு பராயத்திலே இறைவனை நோக்கியே
சிட்டாய் பறந்தது சிறு இதயம்

கண்ட கண்கள் முடியாது என்று நோக்க
கடந்து சென்றது. மனித சக்தியை
கற்று தேர்ந்தார் காலத்தை உணர்ந்தார்
*"கடவுளுக்கு நிகர் யார்"?* என்று -
அவர் கொண்ட அவா
அவனியை செழிப்பிக்க – குருவானார்
அவரின் அன்பு இதயம் ஏங்கியது
*அவரின் சந்நிதியை (இறைவன்)*
*நிதமும் தேடு* என்று
ஆண்டவரின் இருப்பை கண்டு – நான்
ஆண்டவரின் அடிமை என்றார்

ஆண்டவரே தன்னை வனைபவர் - என்று
*"ஆண்டவர் வீட்டை கட்டினாலொழிய*
*அதைக் கட்டுபவர் உழைப்பெல்லாம்*
*வீண்"* என்றார்

கிறிஸ்துவுக்குள் தன்னை மறைத்து
கிறிஸ்துவாய் மாறினார்
கிறிஸ்தவர்களுக்கு தன் வாழ்வால்

*"கிறிஸ்து வெற்றி கொண்டார்*
*ஆள்கிறார், கற்பிக்கிறார்"*
என்று காட்டினார்

கிறிஸ்துவின் மணவாளியாய் - நாம்
கிறிஸ்துவின் மாட்சிக்கு புகழ்தர
கிறிஸ்துவுக்குள் உலக கவர்ச்சிகளை
தள்ளிவி

*"கிறிஸ்துவின் பொருட்டு*
*மடையரானோம்"* என்றார்.
நீங்கள் மரத்துக்கு உரம் போல
நீருக்குள் மீன் போல
நீங்கள் செப பணி செய்யும்
செபமாலைக் கன்னியர்
*"நீங்கள் இறந்து விட்டீர்கள்*
*இப்போது உங்கள் வாழ்வு*
*கிறிஸ்துவுக்குள் மறைந்துள்ளது"*
என்றார்

மரியாளின் அடியவராம் தந்தை தோமஸ்
மகிமை அடைவது செருக்கால் அல்ல
மரியாளின் தாழ்மை நிறை அன்பினாலே
*"மரியாள் வழியாக கிறிஸ்துவிடம்"*
என்றார்

விரும்பம் போல எம் வாழ்வு
சிதறிவிடாது
தன் அனுபவ சிதறல்களால்
வித்திட்டார் எம் சபையை
விருப்புடன் அவர் பணியை செய்து
விண்ணுலக சாட்சிகளாய்
மிளிர்கின்றோம்....

அருட்சகோதரி. மேரி கனீசியா,
செபமாலைக் கன்னியர் மடம்,
பட்டித்தோட்டம், மன்னார்.

4ம் பக்க தொடர்ச்சி.....


## இளைஞனே..........

இவர்களுடன் தொடர்ந்து சென்று தன்முயற்சியால் உரையாடி சிதறும் இவர்களின் எண்ணங்களை உணர்ந்து ஒருமுகப்படுத்தி இவர்களின் கனவுகளையும் பிரச்சனைகளையும் உள்மன போராட்டங்களையும் வெளிப்படுத்த சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். நற்கருணை பக்தியிலும் இறைவார்த்தை வாசிப்பிலும் இளைஞர்களை நாட்டம்பெற செய்து இதனால் உள்ளொளி பெற்று தம்வாழ்வில் வரும் சவால்களை கையாள நம்பிக்கையுடன் செயல்படுத்த முயலவேண்டும். இறுதியாக நாளைய சமுதாயம் வளமடைய வேண்டுமானால் இன்றைய இளைஞர் சமுதாயம் அர்த்தமுள்ள ஆன்மீக வழிமுறைகளால் வளர்த்தெடுக்கப்படவேண்டும். அதேநேரத்தில் இக்கால இளைஞர்கள் எதிர்கால இளைஞர்களுக்கு வழிகாட்டும் ஆன்மீகவாதிக-ளாக பணியாற்றவேண்டிய பொறுப்பை உணர்ந்து இறை இயேசுவில் விழித்தெழுந்து செயல்பட வேண்டும்.

இளையோரின் எழுச்சியே உயிர்த்த யேசுவின் எழுச்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி வீதிக்கு வந்து (வரவேண்டும்) தன் வேலையைச் செம்மையாக செய்ய வேண்டும்



- வண.அ.சகாயம் தி.ச -

இன்று உலகமெல்லாம் பாதிக்கப்பட்டவர்களும், அடக்கப்பட்டவர்களும், அழிந்து-கொண்டிருக்கும் இனமும் அழுதுவேண்டுவது நீதிவேண்டும், நீ தான் தரவேண்டும் இறைவா! மனச்சாட்சியுள்ள மனிதர்கள், நல்லாட்சி செய்கின்றவர்கள் நீதி தருவார்கள், நீதியின் பக்கம் நிற்பார்கள் என்று ஏங்கினோம். எல்லாம் வீணாகிப்போனது. நீதி இருக்கவேண்டிய இடத்தில் அநீதியின் அகங்காரமும் அதன் ஆட்சியும் அதிலிருந்து வருகிற ஆணவமும் தலைவிரித்து தாண்டவம் ஆடுகிறது. நீதி புதைக்கப்படுகிறது, அநீதி விதைக்கப்படுகிறது. நீதிக்கு குரல் கொடுப்பவர்கள் அழிக்கப்படுகிறார்கள், அடக்கப்படுகிறார்கள். எல்லோரும் கைகட்டி, வாய்பொத்தி அநீதியின் ஆட்சியை அனுமதிக்க வேண்டியுள்ளது. இதுவரை எவரும் கேட்டிராத அல்லது அறியாத புதிய கருத்துக்களை கூறிவிட நான் முற்படவில்லை. அநீதியாலும், கொடுமைகளாலும் அடக்கப்பட்டு வாழும் எம் மக்கள் நீதியின் ஒளியில் வாழத்தவிக்கிறார்கள். அவர்களின் உள்ளத்தில் உள்ளதை வெளியில் பேசமுடியாமல் கிடக்கும் நீதித்தாகத்தை தீர்த்துவைக்க நீதியின் ஊற்றாய் விளங்கவேண்டிய, கிறிஸ்துவில் விடுதலை பெற்ற கிறிஸ்தவம் ஆவன செய்யவேண்டும் என்பதே என் விரும்பம். பழைய ஏற்பாட்டில் ஆமோஸ் இறைவாக்கினர் அநீத செயல்களை சுட்டிக்காட்டி நற்செயல் செய்யவேண்டியதன் முக்கியத்து-வத்தை அறிவித்தார். அதே பணியை இன்றைய இலங்கை திருச்சபை திறம்பட முழுமூச்சுடன் செய்யவேண்டும். நீதியை எட்டிக்கசப்பாய் மாற்றி நேர்மையைத் தரையில் வீழ்த்தி, ஏழைகளை நசுக்கி ஓர் இனத்தை பொசுக்கி, தானியவரி வாங்கி அதைக்கொண்டு மாளிகைகளை எழுப்பி வாழுகிறவர்களை யாவே சபிக்கிறார், சாடுகிறார் (ஆமே 5:7-11). நீதியை அறிந்து கொள்ளாத ஆளும் வர்க்கத்தின் முடிவு, தீமை செய்வதில் ஆர்வமாக இருக்கின்றவனின் முடிவு மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கும் (மிக்கே 3:1-3). அடக்கு முறைகளுக்கு எதிராக யாவே நடத்திய போராட்டம் மிகவும் பெரிது. நாம் காணுகின்ற யாவே அடிமைத்தனத்தின் ஆதரவாளரல்ல. சட்டத்தையும் ஒழுங்கையும், நீதியையும் விட்டு அநீதி செய்பவர் பக்கம் அல்ல அவர் இருப்பது. மாறாக உரிமைக்காக போராடியதால் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு அழுகிறவர்கள் பக்கம் உள்ளார். அநீதியான சட்டங்களை ஆக்குவோர்க்கும் அநியாயங்களை எழுதினோர்க்கும் ஐயோ கேடு! அவர்கள் ஏழைகளுக்கு நீதி வழங்காமல் ஓடுகிறார்கள். நம்மக்களுள் எளியோரின் உரிமையைப் பறிக்கிறார்கள். கைம்பெண்களை கொள்ளைப் பொருள் போல பறிக்கிறார்கள். திக்கற்றவர்களை இரையாக்கிக் கொள்கிறார்கள் (எசா 10:12). யாவே என்றும் நம்மில் குடியிருக்க வேண்டுமென்றால் நமது வழிகளை நாம் திருத்திக் கொள்ள வேண்டும் (எரே 7:5). ஏழைகளின், நீதிமான்களின் உரிமைகளைப் பறிப்பவர்கள் சுதந்திரத்தை பறிப்பவர்கள், தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாகிப் போவார்கள் (ஆமே 2:6தொ). இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வை புயலாக பெரும் சுனாமியாக அடித்து சீர்குலைவு செய்து தலைவிரித்துத்தாண்டவமாடுகிறது அநீதி. ஆகவே அம்மக்களுக்கு மறுவாழ்வு அளித்து நீதி வழங்கிட, சீர்குலைந்த வாழ்வை செப்பனிட அவர்களது மனிதத்தன்மையையும், மகிமையையும் பெருமையையும் அளித்திட திருச்சபை மேற்கொள்ளவேண்டிய முதன்மைப்பணி நீதிக்காக உண்மைக்காக உழைப்பதேயாகும். ஆனால் இறை அழைப்பை ஏற்று பணிக்கு என்று வந்தவர்கள் பாராமுகமாக இருப்பது, அல்லது தப்பிக்க முயற்சிப்பது வேதனைக்குரியது. இன்று பதவிக்கும் பகட்டுக்கும், பட்டத்திற்கும் அரசியல்வாதி-களோடு படம் போட்டு விளம்பரம் செய்ய நினைப்பவர்களிடம் எப்படி நீதியை எதிர்பார்க்க முடியும்? அநீதி செய்பவர்களோடு சகவாசம் வைத்துக்கொண்டு எப்படி நீதியை நிலைநிறுத்த முடியும்? நீதியை வீதிக்கு கொண்டு வந்தால் பல சவால்கள் உயிர்போகும் வரை வரும். அதற்காக ஒதுங்கிக் கொள்வது இறையரசுப்பணியாக இருக்கமுடியாது.

தான் கூறுவது உண்மை என்பதை நீதிமான், துன்பத்தில்தான் சாட்சி பகருகிறான். ஏழைகட்கும் துன்புறுவோருக்கும், அநீதியாக அடக்கப்படுவோருக்கும் நீதியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமாக மட்டுமே நாம் நீதிக்கு சான்று பகர முடியும். "நீதிக்காக எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் நற்செய்திப் போதனையில் அடங்குவதாக" என்று லண்டனில் 1981ம் ஆண்டு கூடிய ஆயர் பேரவை கூறுகிறது. சமாதானம் வேண்டுமென்றால் நீதிக்காக உழையுங்கள் என்று 1972ம் ஆண்டு உலக சமாதான நாளன்று திருத்தந்தை அறைகூவல் விடுத்தார்.

இறுதியாக வன்னி மண்ணில் நடந்தவைகள் மறைக்கப்படவும் மறக்கப்படவும் நீதி வெளிப்படாமல் இருப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டு புதைக்கப்பட்டவர்கள், மறைக்கப்பட்டவர்கள் கடத்தப்பட்டவர்கள் நீதிக்கு சாட்சியாக, அநீதிக்கு சாட்டை அடியாக வெளிவீதிக்கு வருகிறார்கள். மக்கள் கேட்பது நிதியல்ல, நீதியை. வீதியல்ல நீதியே எம்மக்களுக்கு வேண்டும். மலைப் பொழிவில் நீதியைப் பற்றி கூறப்பட்டது, மனச்சாட்சி உள்ளவர்களின் மனதை தட்டி எழுப்பவேண்டும். "நீதியை நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்". அதுவே எல்லோரின் இலக்காக இருக்க இறைவனை வேண்டுவோம்.

# பொறுப்புக்கள் சுமைகளல்ல

மனித சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் பொறுப்புக்களும் கடமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. எந்த நிலையில் இருக்கும் மனிதனுக்கும் பொறுப்புக்கள் உண்டு. பெற்றோராக, பிள்ளைகளாக அதிபராக, ஆசிரியர் ஆசிரியைகளாக, மதத்தலை-வர்களாக, ஏன் நாட்டுத் தலைவராக கூட இருக்கலாம். அத்தனை பேருக்கும் ஏதோ ஒரு வகையில் பொறுப்புக்கள் இருக்கின்றன. சமுதாயத்தில் இன்று எங்கு பார்த்தாலும் நொந்த நிலை. குடியினால் குடும்பத்தின் நிம்மதியை இழக்கச் செய்யும் தந்தையர்கள், பொறுப்பில்லாத தாய்மார்கள். ஏன் எனக்கு மட்டும்தானா பொறுப்பு என்று ஏனோதானோ என்று தட்டிக் கழிக்கும் பிள்ளைகள். பெற்றோரை நாம் பராமரிக்க வேண்டும் என்பதை உணராமை. இது என் பொறுப்பல்ல, அண்ணனின் அல்லது தம்பியின் பொறுப்பு என்றும் ஆண்பிள்ளைகளுக்கல்ல பெண்பிள்ளைகளுக்குத்தான் என்றும் தட்டிக்கழிக்கின்ற சிந்தனையற்றச் செயல்களால் முதுமையடைந்த பெற்றோர்கள் வீடுகளிலும் வைத்திசாலைகளிலும் அநாதரவாக இருக்கின்ற நிலையை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. தந்தை தன் கடமைகளை உணர்ந்து செயற்பட்டிருந்தால் படிக்க வேண்டிய வயதில் தனது கல்வியை துறந்து கூலி வேலைகளைச் செய்து குடும்பத்தைச் சுமக்கும் நிலை பிள்ளைகளுக்கு ஏற்பட்டு இருக்காது. தாயானவள் தன் பிள்ளைக்கு தேவபக்தியையும் ஒழுக்கத்தையும் கல்வியையும் கவனிக்காமல் உணவு மட்டும் கொடுத்தால் போதுமா? இறைவன் உனக்குத் தந்த குழந்தைகளின் எதிர்கால வாழ்விற்கு நீ என்ன செய்தாய் என்று நினைத்துப்பார்க்க வேண்டும். அடுத்து ஒவ்வொரு மாணவனும் மாணவியும் நாளைய சமுதாயத்தின் விடியலைத் தீர்மானிக்கின்ற கருவிகள். ஆசிரியர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவச் செல்வங்களை இனங்கண்டு அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து ஆற்றல்களை வளர்த்தெடுக்கும் பாரிய பொறுப்பு அவர்களுக்குரியது. ஏய் மடையா, நீ உருப்பட மாட்டாய், நீ மாடு மேய்க்கப் போ, ஆடு மேய்க்கப் போ என்று கோபப்பட்டு வார்த்தைகளை பிரயோகித்து மாணவச் செல்வங்களை ஏளனப்படுத்தி குத்திக்காட்டுவதன் மூலம் அவர்களின் எதிர்கால வாழ்விற்கு கேடு விளைய வாய்ப்பேற்படுகின்றது. ஆசிரியர்கள் மிகக் குறைந்த ஆற்றல் உள்ள பிள்ளைகளைத் தட்டி கொடுத்து உற்சாகப்படுத்துவதன் மூலம் அவர்களுக்கேற்ற கற்பித்தல் முறைகளைக் கையாள்வதன் மூலம் மாணவர்களிடம் காணப்படும் உடல் உள குறைபாடுகளை அறிந்து நிவர்த்தி செய்தவன் மூலம் பொறுப்புள்ள ஆசான்களாக மாற முடியும். நிலத்தில் விதைக்கப்பட்ட விதைக்கு பசளையும் நீரும் இட்டால் செழிப்பாக வளர்த்து பலன் கொடுக்கும். அதே போல் சிறந்த மாணவச் சமுதாயத்தை உருவாக்குவதில் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து பொறுப்புக்களை சீரிய முறையில் செயலாற்றினால் சிறந்த வளர்ச்சி பெற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும்.



திருமதி. இ. பற்றிசியா பீரிஸ்
8ம் வட்டாரம், வங்காலை.

# முப்பது வருட நிறைவில் ........ (1ம் பக்க தொடர்ச்சி)

இக்குடும்பங்கள் அன்பிலே அத்திவாரமிடப்பட்டு பெரியோர் என அனைவரும் ஒன்றிணைந்து அயலில் வாழும் திருச்சபையாக சாட்சிய வாழ்வு வாழவேண்டும்" ஒற்றுமையில் இறுக்கம்பெற வேண்டும். அன்பியம் என்பது அகன்ற குடும்பம். இதில் சிறியோர், இளையோர், குடும்பம், என இளையோர், அன்பியம் சார்ந்த ஆழமான செய்திகளை வழங்கினார். ஆயரின் மறையுரையைத் தொடர்ந்து இளைஞர்களின் அர்ப்பண உறுதிமொழி வழங்குதல் இடம்பெற்றது. காணிக்கைப் பவனியில் இவ்வாண்டிற்கான பங்கு மேய்ப்புப்பணித் திட்ட சுருள்கள் பங்குகளின் இளைஞர் பிரதிநிதிகள் மூலம் ஆயரிடம் கையளிக்கப்பட்டன. திருவிழா திருப்பலி முடிவுற்றதும் வேதசாட்சிகள் அன்னை திருச்சுரூப ஆசீர் ஆயரினால் அளிக்கப்பட்டது. தொடர்ந்து 2008 - 2010 காலப்பகுதிக்குரிய இளைஞர் ஆணைக்குழு செயற்பாட்டறிக்கை மலர் இளையோர் இயக்குனராயிருந்த அருட்பணி. யேசுராஜா அடிகளின் தலைமையில் வெளியிடப்பட்டது. ஈற்றில் மறைமாவட்ட ஆயர் அவர்கள் விழாவிற்கு வந்திருந்த இளையோரை சந்தித்து உரையாடி இளைஞர் ஆணைக்குழு புதிய இயக்குனர் அருட்பணி. நெவின்ஸ் பீரிஸ் அவர்களின் ஏற்பாட்டில் இளைஞர் ஆண்டு செப அட்டைகளை அவர்களுக்கு வழங்கி ஆசிர்வதித்தார். மறைமாவட்ட பெருவிழா நிகழ்விற்கு அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அரச, அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள், பங்கு சபைகளின் பிரதிநிதிகள் மற்றும் பல பங்குகளைச் சேர்ந்த இறைமக்கள் என பெருந்தொகையானோர் பங்கெடுத்திருந்தனர்.

மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

# புனிதரின் பாதையில்

## புனித ஆகத்தம்மாள்

### கன்னி, மறைசாட்சி – (கி.பி.251)

மாசி 05

இவர் பாலெர்மோ, கட்டோனியா ஆகிய இரு நாடுகளின் பாதுகாவலி. இவர் இறந்த ஓராண்டிற்குப்பின் எட்னா மலையில் தோன்றிய எரிமலையின் நெருப்பு ஆறு, இவரிடம் எழுப்பிய மன்றாட்டின் பயனாக நீங்கியது. இதன் பொருட்டு இன்றுவரை நெருப்பிலிருந்து பாதுகாப்புப் பெற இவரது உதவி நாடப்படுகிறது. எட்னா எரிமலை உருகித் தீப்பிளம்புகள் சீறி வெளிவரும் போதெல்லாம் இன்றும் கட்டோனியா நகர் மக்கள் ஆகத்தம்மாள் பயன்படுத்திய தலையில் மூடும் துணியை மக்கள் பார்வைக்கு வைத்து வணக்கத்துடன் செபிக்கின்றனர்.

உயர் குலத்தில் தோன்றிய ஆகத்தம்மாளை இவரின் பெற்றோர் இறைவனிடம் முழுமையாக அர்ப்பணித்தனர். அலகையினாலும் அரக்கர்களாலும் அவரது கற்புக்கு ஏற்பட்ட சோதனைகளை அளவில்லாத மனவலிமையுடன் வென்றார். கொடுங்கோலாட்சி புரிந்து வந்த டீசியஸ் காலத்தில் க்வின்தானுஸ் என்பவன் இவரை மணந்துகொள்ள முயன்றான். முயற்சி பயன் தரவில்லை. இதனால் சினம்கொண்டு இவரை ஒரு கிறிஸ்தவர் என்று குற்றஞ்சாட்டினான். இவரைக் கெடுக்க ஒரு தீய பெண்ணை ஏவிவிட்டான். புனிதவதி அசைவுறவில்லை. பிறகு கடுமையாக அடிக்கப்பட்டார். சிறைப்படுத்தப்பட்டார். அவரின் மார்பு முதலாக அறுக்கப்பட்டது. அன்றிரவே புனித பேதுரு அவருக்குத் தோன்றி காயங்களைக் குணமாக்கினார். பின்னர், கொலைஞர்கள் நெருப்பு மூட்டினர். அதில் இவரைத் தூக்கி எறிந்தனர். அந்நேரத்தில் அந்நகர் முழுவதும் அதிர்ந்ததைக் கண்ட மக்கள் தனக்கு எதிராகக் குழப்பம் செய்வர் என்றறிந்த அதிகாரி இவரை மீண்டும் சிறையில் அடைக்கக கட்டளையிட்டான். நெருப்பில் அடைந்த காயங்களால் தமது ஆன்மாவை இறைவனிடம் அர்ப்பணித்தார்.



## சிந்தனைக்கு

புனித மெத்தோடியஸ் குறிப்பிடுகின்றார்: "முன்னாட்களில் தோன்றிய மறைசாட்சி இவர். இவர் விசுவாசத்திற்காகப் போராடிய முறையினால் இவரது புகழ் விளங்குகிறது. ஆனால் இவர் பெயரால் நிகழ்கின்ற பற்பல புதுமைகளின் பொருட்டு இந்நாட்களின் தேவைக்கேற்பத் தோன்றிய புனிதவதி இவர் என்று கூற இயலும்".

"ஆகத்தா" என்பது ஒரு கிரேக்கச் சொல். "நல்லது" என்பது அதன் பொருள். நன்மைகளின் ஊற்றாகிய தேவனிடமிருந்து இவர் அடைந்த நன்மைத்தனத்தை இது குறிக்கின்றது. மேலும் இவர் புரிந்துவந்த நற்செயல்களின் வழியே இப்பெயரைத் தகுதியாக்கிக் கொண்டார் என்பது முற்றிலும் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்


## றேசன் அரிசி கொண்டு நேசமுடன் பொங்கிடுவோம்



பொங்கலென்று ஓர் தினம்
தைத் திங்களன்று வந்திடுமாம்
எங்களது நாட்டினிலே
வந்த கொடும் போரினிலே
தங்களது வீடுவாசல்,
தாய் பிள்ளை சோதரர்கள்
தங்கம் நிகர் நெற்காணி
அனைத்தையுமே இழந்தனரே!

ஆளப் பிறந்தவர்கள்
அதிகாரம் செய்தவர்கள்
ஆளை ஆள் தானொடுக்க
அழிவுப்போர் தொடங்கினரே
வாழப் பிறந்த பலர்
வலிமை மிகு குண்டுகளால்
மாழ விதியாச்சே
மண்ணுக்கு இரையாச்சே

மீளக் குடியமர்வு என்ற
நிலை வந்தபோது
மீதமிருந்தவர்கள் மீண்டு வந்தனரே
வாழவழிதேடிப்
பயிர்ச் செய்கை செய்தவர்கள்
சோழப் பெரு மழையால்
சொத்தெல்லாம் இழந்தனரே



புதுநெல்லு வெட்டியல்லோ
புதுப்பானை தனிலிட்டு
அது பொங்கல் பொங்குவது
அந்நாளின் வழக்கடன்றோ?
எது நெல்லு வெட்டுவது
புதுப்பானை தேடுவது
மெதுவாகப் பொங்கிடுவோம்
மேலைக்கு நாமிருந்தால்

ஈசன் விட்டவழி இது வென்றால்
நாமெல்லாம் நேசமுடன்
ஒன்றிணைந்து ஓரடுப்புத்தான் மூட்டி
றேசன் அரிசி கொண்டு - வாசம் பிறந்திடவே
பாசமுடன் பகிர்ந்துண்போம்
பொங்கல் பொங்கியே

தேவதாசன் அல்மேடா,
பறப்பாங்கண்டல்

## புத்தாண்டின் விடியலில்

புலர்ந்திருக்கும் புத்தாண்டில் புத்தொளி வீசவும்!
புரியாத புதிர்களுக்கு புதுவிடை பிறக்கவும்!
புண்ணிய நதியிலே புதுமணம் கமழவும்!
புத்தாண்டின் விடியலில்
புது யுகம் படைத்திட - எம்
பிடிவாத மனங்களை புறந்தள்ளி வைப்போமா?

வாழும் திருநாட்டில் வாழ வழி தெரியாமல்
வாடி வதங்கி நிற்கும் - எம்
மானிட வர்க்கத்தின் மடமைதான் என்னவோ!

சாதிவெறி, மதவெறி, இனவெறி
குடிவெறி, குலவெறி, கோத்திர வெறி - என
பல வெறி பிடித்து வேங்கை போல
வீராப்பு காட்டி
படைத்த சரித்திரம் தான் என்னவோ!


புத்தாண்டின் விடியலில் புத்தூக்கம் பெறுவோம்
புதுப்படைப்பாகி புது யுகம் படைப்போம்!
புவியாழும் இறையோனின் அருளான பார்வையில்
இருளான வாழ்வு ஒளியாக மாறட்டும்
புலர்ந்த ஆண்டிலே புது விடியல் பிறக்கட்டும்

பெற்றெடுத்த பிள்ளைகள்
பெருவாழ்வு வாழட்டும்!
பெற்றோரை வணங்கி பெரியோரை மதிக்கட்டும்!
சிட்டாக பறக்கும் எம் சின்னஞ் சிறார்கள்
சிலையாகிப் போகாமல் சிறப்பாக வாழட்டும்!
புத்தாண்டின் பூ வாசம் புவியோரை ஆளட்டும்!

சத்தங்கள் இல்லாமல் - இன யுத்தங்கள் வெடிக்காமல்
புத்தாண்டின் விடியல் புது மணம் பரப்பட்டும்
சுத்தமாய் அக நீராடி நிமலனின் பாதத்தை
நித்தமும் இணைத்து முத்தங்கள் செய்வோம்

அ. ஜஸ்மின் ஷறோன் ஆவணம்,
நானாட்டான்.

## தைத்திருநாள்



மூன்றுமணியானபின் தலை தோய்ந்து
முற்றத்திலே கோலமிட்டு
மூட்டிவைப்பார் எம் அன்னை ஓரடுப்பை
வயலினிலே கதிரறுத்து
வடிவழகாய் அரிசிகுத்தி
புதுப்பானை தன்னிலிட்டு
பொங்கல்பானை
ஏற்றிவைப்பார் எங்களப்பா
கதிரவனார் கண்விழித்து
காட்சிதரும் வேளையிலே
வெண்ணிறப்பால் பொங்கிவரும்
விவசாயி முற்றத்திலே
தொங்கிளநீர் சீவிவைத்து
செங்கரும்பு தட்டுவைத்து
மாங்கனியின் சாற்றுடனே
பொங்கலுண்ண
குளுமிடுவார் சிறுவரெல்லாம்
உழுதுண்டு அகமகிழும்
உழவர்தம் வாழ்வினிலே
தைரியங்கள் பொங்கிவரும்
தைத்திருநாள் வேளையிலே
ஒன்றுபட்டு தாம் உழைத்து
ஒற்றுமைக்கே பலம் சேர்ப்போம்
உலகத் தமிழரெல்லாம் உளம் கனிவோம்
உழவர் திருநாளினிலே

அ. றாஜன்,
வாழ்க்கைப் பெற்றான்கண்டல்.

## இளமைக் காலம்

பூவாகி, காயாகி, கனியாகையில்
புகழோடு இளமை மணம் வீசுது
நோயாகி, பிணியாகி, துயராகையில்
பேயாக வந்து தினம் வாட்டுது

மருந்தாகி, விருந்தாகி, இருந்தாள்கையில்
மனதோடு இன்பம் உறவாடுது
துயர் தாங்கி மனமேங்கி பிரிவாகையில்
மனந்தாக்க முடியாமல் நிலைசாயுது

பணமாகி படிப்பாடி பதவியாள்கையில்
பண்ணோடு வாலிபம் கலையாகுது
கண்ணாகி கருத்தாகி செயலாகையில்
காரியம் இளமைக்கு வசமாகுது

மண்ணாகி சிதைவாகி மறைவாகையில்
மனம் கண்ட விதிக்கூற்று சரிவாகுது
வாளாகி கூராகி போராகையில்
வாலிபம் வீரத்தின் தொடராகுது

நன்மையாகி நல்லிரக்கமாகி மகிழ்வாகையில்
நானிலத்தின் பெரும் மன்னனாகுது
நாளாகி நரையாகி நலிவாகையில்
நாளும் முடிந்ததென்று ஓய்வாகுது.

அருட்சகோதரி. மேரி மொறின் றோச்
தேசிய, கல்வியற் கல்லூரி, கோப்பாய்.

## எதற்கு இந்த தினம்?

கண்ணியத்தை களங்கப்படுத்தும்
காதலர் தினம்
பெற்றோர்கள் முகம் சுழிக்க
பிள்ளைகள் கூத்தாடும் தினம்
கலாசாரத்தையும் கற்பையும்
காயப்படுத்தும் தினம்
காதலை கவர்ச்சியாக்கும்
கயவர்களின் மூடத்தனம்
போதையால் பாதை மாறி
அரைகுறையாய் ஆனது குணம்
அன்பிற்கு விலை வைத்து
கரம் பற்ற கைமாறும் பணம்
வாழ்த்துக்கள் சொல்வதாய்
வாழ்க்கையை தொலைக்கின்ற தினம்
பூங்கொத்து கொடுத்து
பூவையரை புதைக்கின்ற தினம்
மண்தோன்றிய காலத்திலே
மானம் காத்த தமிழ் இனம்
நாகரீக போர்வைக்குள் - இன்று
நாரிப் போனது நல்லோர் மனம்
தன் பிள்ளைகளை காத்திட
தவியாய் தவிக்கும் பெற்றோர் மனம்
என் இனிய தேசத்தில்
எதற்கு இந்த தினம்?

நிகால்,
பெரியகடை மன்னார்.

# சிறுகதை

## உதவாத பணம்

திரு. ச. மார்ட்டீன் டயஸ்
பேசாலை

அந்தோனிக்கு மூன்று பிள்ளைகள். மூத்தது ஒரு பெண்குழந்தை. ஒன்றரை வயதிலேயே இறந்து விட்டது. அருளப்பன் அப்போது பக்கத்திலேதான் குடியிருந்தார். அந்த நாளிலேயே வசதியாகத்தான் இருந்தார். நல்ல படிப்பும் பதவியும் கைநிறையச் சம்பளமுமாகச் செல்வாக்கோடு இருந்தார்.

அந்தோனியின் மகளுக்குச் சுகமில்லை. உள்ளூரிலே மாதக்கணக்கில் வைத்தியம் செய்து கைவிடப்பட்ட நிலையில் கொழும்புக்கு கொண்டு போகச் சொன்னார் டாக்டர்.

இருந்த பணம் எல்லாம் மூன்று மாதத்தில் கரைந்து விட்டது. கையில் காசில்லாத நிலையில் அருளப்பனிடம் உதவி கேட்க;

அன்றுதான் முதன் முறையாகப் பிள்ளையைப் பார்க்க வீட்டிற்கு வந்த அருளப்பன்; பிள்ளையைக் கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு அந்தோனியை வெளியே தனிமையாக அழைத்து வந்து "நான் சொல்லுவதைக் கொஞ்சம் கவனமாகக் கேளு. இந்தக் குழந்தை கொழும்புக்குக் கொண்டு போகக் கூடிய நிலையில் இல்லை. கொண்டு போகும் போது வழியில் ஏதாவது நடந்தாலும் நடந்து விடும். அப்போது உனக்குச் சிரமமும் இரட்டிப்பாகி விடும். செலவும் அதிகம் ஆகும்.

உன்னால் முடிந்த அளவு என்ன செய்ய முடியுமோ செய்து பார்த்து விட்டாய். கடவுளுக்குச் சித்தமில்லை என்றால் நாம் என்ன செய்தாலும் கிடைக்காது. உனக்கு எப்போது தேவையோ அப்போது நான் கட்டாயம் உதவி செய்வேன் என்று சொல்லிப் போய்விட்டார் அருளப்பன்.

அவர் மீண்டும் அவ்வீட்டுக்கு வந்தது நான்கு நாட்களின் பின் குழந்தை இறந்த செய்தி கேட்டுத்தான். வந்தவர் குழந்தையைப் பார்த்த பின் அந்தோனியை ஒரு பக்கமாக அழைத்து சென்று ஒரு கவர் கூட்டைக் கொடுத்தார்.

நான் உனக்குச் சொன்னேன் அல்லவா? உனக்கு எப்போது தேவையோ அப்போது உதவி செய்வேன் என்று. இதில் பத்தாயிரம் இருக்கு. செலவுக்கு வைத்துக்கொள்.

அந்தோனி அருளப்பனை நிமிர்ந்து பார்த்தான். சில நிமிடங்கள் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாளைக்கு ஆயிரம் பேருக்கு மறுமொழி சொல்லும் அருளப்பனுக்கு அந்தோனியின் கண்கள் என்ன பேசுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளவே முடியவில்லை. அந்தோனி இறந்த தன் குழந்தை அருகே சென்றுவிட்டான்.

மாலை ஐந்து மணிக்கு அடக்கமும் முடிந்தது. மூன்றாம் நாள் கஞ்சியும் காய்ச்சி ஊற்றியாயிற்று. அருளப்பனும் எல்லா நிகழ்வுகளுக்கும் வந்திருந்தார். எல்லாம் முடிந்து விட்டது. எஞ்சியிருந்த சிலரும் ஒவ்வொருவராகச் சொல்லிக் கொண்டு கிளம்பினார்கள். அருளப்பனும் சொல்லிக் கொண்டு போக வந்தார்.



அந்தோனி அவரை ஒரு பக்கமாக அழைத்துச் சென்று, தன் சறத்தில் சுற்றிக் கட்டி வைத்திருந்த அந்தக் கவர்க்கூட்டை அப்படியே எடுத்து அருளப்பனிடம் கொடுத்தான். அந்தோனியின் உள்ளம் போல் அந்தக் கவர்க்கூடு நைந்து போயிருந்தது.

அருளப்பன் அந்தோனியைப் பார்த்தார். அந்தோனி நிலத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னான். மண்ணுக்குள்ளே போற பிண்டத்துக்கு எதுக்கு ஆயிரத்து ஐநூறுக்கும் இரண்டாயிரத்துக்கும் பெட்டி? வீட்டிலே கிடந்த பலகையிலே நானே ஒன்றை அடிச்சிட்டேன். ஞானஸ்நான சட்டை சுத்தமாகப் பளிச்செண்டு இருந்தது. ஒரு சோடி மேசும் இருந்தது. பிரச்சினை இல்லாமற் போயிற்று.

வாங்கின அரிசி தோங்காய் கிடந்தது அதிலே கஞ்சியும் காய்ச்சி ஊற்றியாயிற்று. இனி என்ன செலவு ஏதாவது அவசியம் ஏற்படும் போது கேட்டுப் பெற்றுக் கொள்கின்றேன். இந்தாங்க. 'உயிருக்கு உதவாத பணம் சவத்திற்கு எதற்கு?' என்பதாய் அந்தோனியின் சொல்லாத சொற்கள் அருளப்பனின் நெஞ்சை நறுக்கென்று குத்தியது. அருளப்பனின் கையில் பணத்தைத் திணித்துவிட்டு தலைமுழுகக் கிணற்றடிக்கு மாற்றுச் சறத்தையும் துண்டையும் எடுத்துச் சென்றான் அந்தோனி.



## சிந்தனைக்கு சில நல்ல வார்த்தைகள்

- பணிவு என்பது அடிமையின் சின்னமல்ல, அதுவே உயர்ந்த பண்பின் அறிகுறி.
- வேதனையைப் பொறுத்துக் கொள்பவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான்.
- உன்னைச் சுற்றிலும் எதிர்ப்புக்கள் இருக்கிறது என்றால் தளராதே! நீ சுறுசுறுப்புடன் முன்னேறிக் கொண்டு இருக்கிறாய் என்பது அதன் அர்த்தம்.

ம. காமலின் செளமியா குரூஸ், அரிப்பு/சிலாபத்துறை.

++++++++

- துன்பத்தில் எப்படியாக சிரிக்க வேண்டும் என்பதை கற்றுக்கொள்ளும் அதே வேளை அழுவதால் எவ்வித வெட்கமும் இல்லை என்பதை புரிந்து கொள்.
- ஏமாற்றுவதிலும் பார்க்க தோற்றுப்போவது சிறந்ததாகும்.

அ. கிறிஸ்ரின் தர்ஷனா, ப.துட்டுவாகை, நேரியகுளம்.

++++++++

- அடக்கத்துடன் வாழ் அடிமையாக வாழாதே, கருணையுடன் வாழ் கர்வத்துடன் வாழாதே.
- குழந்தைகளிடம் அன்பாக நடந்தால் இறைவனிடம் அன்பு செலுத்துவதற்கு ஒப்பாகும்.
- இலட்சியம் மட்டும் உயர்வாக இருந்தால் போதாது. அதனை அடையும் வழியும் உயர்வாக இருக்க வேண்டும்.

R.S. றொசானி, கற்கிடந்தகுளம், முருங்கன்.

## கொஞ்சம் சிரியுங்க

ஒருவர் :- "உன் மனைவியை "கைபேசி" என்று செல்லமாக அழைக்கிறாயே.... அவள் செல்போன் பிரியையா?
கணவன்:- "அட நீ வேற... அவளுக்கு கோபம் வந்தால் அவளின் கைதான் பேசும்!
ம. ஜரின் நிலக்ஸிக்கா, ஒலிமடு, நானாட்டான்.

❖ ❖ ❖

ராஜ் :- உங்களுக்குப் பேய் இருக்கு என்கிறதில நம்பிக்கை இருக்கா?
சதீஸ் :- இருக்கு
ராஜ் :- பார்த்திருக்கின்றீர்களா?
சதீஸ் :- பார்த்திருக்கின்றீர்களாவா? ஆதோடுதானப்பா குடும்பம் நடத்துகின்றேன்.
மஞ்சு :- என் பல் ஒன்று ரொம்ப நாளாக ஆடிக்கிட்டு இருக்கு.
விஜி :- எப்ப அரங்கேற்றம்.
S. வினோதினி, நறுவிலிக்குளம், வங்காலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த கல்விமானும் கைதேர்ந்த எழுத்தாளருமாகிய அமரர். அருட்சகோதரர் கலாநிதி பப்ரிஸ் குருஸ் அவர்களின் 'Reaching for the stars' (விண்மீன்களை நோக்கி) என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம் அச்சிடுவதற்கு தயாரான வேளை அவரது சுகயீனம், இறப்பு காரணமாக அது இயலாமல் போனது. அந்நூலிலிருந்து அன்னாரின் அருமையான ஆக்கங்கள் தொடர்ச்சியாக எமது மன்னா பத்திரிகையில் பதிவு செய்யப்படுகிறது.



## அறிமுகம்

**ஆக்கம்: அமரர். கலாநிதி ப்பரிஸ் குருஸ் FSc**

*தமிழாக்கம்: அ.யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.*

**"உயர ஏறு**
**தூர ஏறு**
**ஆகாயம் உனது குறிக்கோள்**
**விண் மீன் உனது இலக்கு"**

இந்த நேர்த்தியான சிறிய வசன நடை விண்மீன்களை அடைய என்னை எப்பொழுதும் தூண்டிக்கொண்டே இருந்தது. வேறுவிதமாகக் கூறப்போனால், நான் எனது குறிக்கோளை அடைவதற்கு இந்த வசன நடை மிகுந்த விதத்தில் செயல்பட்டுள்ளது. எனது சிறிய அனுபவத்தில் புதுமைகள் நடப்பதை நான் கண்டுள்ளேன். விசேடமாக கடந்த ஐம்பது ஆண்டுகளாக மனித இனம் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு நம்பமுடியாத அளவுக்கு நீண்ட சுவடுகள் எடுத்து வைத்து வெற்றி பெற்றுள்ளது. நினைக்க முடியாதவைகள் நடைபெற்றுள்ளன. மனிதன் சந்திரனில் காலடி எடுத்து வைத்து விட்டான். மற்றக் கிரகங்களுக்கு செய்மதிகளை அனுப்பி அவை அந்த மில்லாத இடத்தில் சந்திக்கவைக்க வொயேஜர் IIயும் அனுப்பிவிட்டான். வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி, கணணி, பக்ஸ், ஈ மெயில், இன்டர்நெட் ஆகியன "பொத்தானை அழுத்தும்" யுகத்தின் தீவிர நவீன தொலைத் தொடர்புசாதனங்களாகும். இந்த அதிசயமான கண்டு பிடிப்புக்கள் ஆச்சரியமான வாழ்வுக்கு இந்த உலகத்தை ஆக்கியுள்ளன. வைத்திய துறையின் சாதனைகள் நெஞ்சை சிலிர்க்க வைக்கின்றன. விளையாட்டில் பெற்றுள்ள சாதனைகள் அபூர்வமாக ஜொலிக்கின்றன. நினைவுக்கெட்டாத காலத்தில் இருந்து ஒவ்வொரு துறையிலும் உயர்வு பெற கடுமையாக முயல்வதுதான் தொழிலாக உள்ளது. நீங்களும் நானும் அவற்றைத் தொடரத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இறுமாப்பும் தற்பெருமையும் கொண்ட நிலையில் தடுமாறிப் போகாமல் இருக்க ஆன்மீக பயபக்தி என்ற ஒரு பொருள் பெரிய உதவியாக இருக்கும். ஆன்மீகத்துக்கும் சரீரத்துக்கும் இடையே ஒரு சமமான போக்கை கடைபிடிக்க வேண்டும். இன்றேல் நாம் குரூபியான குணமுள்ளவர்களாகவே போய் முடிவோம். இருந்தும் இந்த இராஜ்யத்தில் ஆன்மீகம், சரீரம் ஆகிய இரண்டிலும் உயர கடுமையாக முயலவேண்டியது அவசியம். நாங்கள் சரியான பாதையில் செல்கிறோமா என்பதை நிட்சயப்படுத்திக் கொள்ள ஒரு குறிக்கோளை வைத்து அதை அடைய முயல்வது மிக முக்கியமான ஒன்று. றொபேர்ட் லூயிஸ் ஸ்ரீவன்சன் சரியாகக் கூறினார், "வைத்த இலக்கை அடைவதுதான் வாழ்க்கையின் பெறுமதியான அதிர்ஷ்டம்". பயங்கர ஏமாற்றம், அதைரியம், நம்பிக்கை இழந்த மக்களுடன் நான் தொடர்பு கொள்ள வேண்டிய எனது விருப்பம் இதுதான். முடியாத விடயங்களை கனவு காணுங்கள். நம்பிக்கை மனித இதயத்தில் இருந்து நிலையாக ஊற்றெடுப்பது போல எப்பொழுதும் திறமையானதையே நம்புங்கள். விழித்திருக்கும் மனிதனுடைய கனவு நம்பிக்கைதான்.

## அத்தியாயம் - 01

### (தொடர்கட்டுரை)

# ஆன்மீக ஏக்கம்

ஆன்மீக நலத்தை அடைவதற்கு ஒருமறைபொருளான சக்தி நம் எல்லோரையும் தூண்டுகிறது. இதை அறிந்தே கிறிஸ்து கூறினார்: "மனிதன் அப்பத்தினால் மட்டும் அன்று, கடவுளின் வாயில் நின்று வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் உயிர்வாழ்கின்றான்" (மத் 4:4). மட்டுமல்ல கிறிஸ்து மேலும் கூறினார்: "உண்பதையும் குடிப்பதையும் விட உயிரும் உடலும் உயர்ந்ததல்லவா (மத் 6:25).

ஆபிரிக்க நாட்டிலோ அல்லது அமேசன் காட்டிலோ வாழ்ந்த புராதன மக்களும் செவ்விந்தியர்களும், பழங்குடி மக்களும் கூட இதே விதமான ஆன்மீக உணர்ச்சியை அடைய தணிக்க முடியாத தெய்வீகதாகம் கொண்டிருந்தனர். சிலர் அதைக் கடவுள் என்று அழைக்கிறார்கள் மற்றவர்கள் அதை உயர்ந்த ஆவி அல்லது தெய்வீக சக்தி என்று அழைக்கிறார்கள். இந்துக்கள் அதை பிரம்மா என்று அழைக்கின்றார்கள். இஸ்லாமியர்கள் அதை அல்லா என்று அழைக்கின்றார்கள், கிறிஸ்தவர்கள் அதை விண்ணகத்தந்தாய் என அழைக்கின்றார்கள். இவையெல்லாம் இயற்கை என்றே தெரிகின்றன. காரணம் நாங்கள் கடவுளிடமிருந்து வந்தோம் உற்பத்தி மூலமான கடவுளிடமே திரும்பவும் செல்ல ஆசை.

அமெரிக்க எழுத்தாளராகிய அலெக்ஸ் ஹேலி என்பவர் எழுதிய புகழ்மிக்க "Roots" "மூலம் அல்லது வேர்" என்னும் நூலைப் பற்றி அநேகமானோர் அறிந்திருப்போம். அவர் ஒரு கறுப்பு அமெரிக்கராக இருந்தாலும் அவருடைய மூதாதையர் உள்ள இடமாகிய ஆபிரிக்காவிற்கு, எங்கே தனது பரம்பரை உண்டோ, அங்கே திரும்பிப்போக விரும்புகின்றார். எத்தனையோ சொல்லமுடியாத கஸ்டங்களுக்கும், தடைகளுக்கும் மத்தியில் நம்ப முடியாத பிரயாணத்தை மேற்கொண்டு ஆபிரிக்கா சென்றடைந்தார். அவர் தனது கண்டுபிடிப்பில் மாபெரும் வெற்றியும் பெற்றார். அவருடைய ஆதிமூதாதையரைத் தேடிக்கண்டு பிடித்தார். அவருடைய பரம்பரையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற அந்த உணர்ச்சிதான், ஏக்கம்தான் அவரை அந்த மூதாதையரின் இடத்திற்கு இட்டுச் சென்றது. அது சந்தேகமின்றி அவருக்கு ஒரு உணர்ச்சியைத் தூண்டும் அனுபவமாக இருந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு நான் ஓர் அருமையான தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்தேன். சமன் என்று சொல்லக்கூடிய சிவந்த மஞ்சளும் இளஞ்சிவப்பு சதையும் கொண்ட ஒரு வகையான மீனின் வாழ்க்கை வட்டத்தைப் பார்த்தேன். சமன் என்ற மீன் மலைத் தொடரின் இருந்து ஓடும் நீரருவியிலே உற்பத்தியாகின்றது. அது முட்டையிடும் காலம் முடிந்ததும், வழமையாக அந்த முட்டைகள் மழை நீரினால் அடிக்கப்பட்டு அல்லது நீர் வீழ்ச்சியினால் சமுத்திரத்துக்கு அடித்துச் செல்லப்படுகின்றது. இந்த முட்டைகள் பொரித்து மீனாகி பருவமாகி மறுபடியும் முட்டையிட ஆயத்தமாகும் பொழுது அவைகள் நீரோட்டத்துக்கு எதிராக நீந்தி தங்கள் பிறப்பிடமாகிய மலைத்தொடர் பகுதியில் உள்ள நீர் அருவிக்கு முட்டையிடச் செல்கின்றன. அவைகள் தங்களுடைய பாரம்பரிய இடத்தை நாடுகின்றன. நீரோட்டத்துக்கு எதிராக நீந்துவது ஒரு சுறுசுறுப்பான மிகக் கடினமான பயணமாக இருந்தாலும் தாங்கள் விரும்பிய இடத்தை அடையுமட்டும் எந்த இடையூறுகளும் அவற்றை தடை செய்ய முடியாது. (தாங்கள் நினைத்த இடத்தை வந்தடைய பல ஆயிரக்கணக்கான மைல்களை நீந்துவதுடன் கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் எடுக்கின்றன) சமன் மீன்களை பொறுத்தவரை தங்களது பிறந்த இடத்தை தேடிச் செல்வது ஒரு குறிப்பிடத்தக்க ஆச்சரியம். அதை இயற்கை சுபாவமென்று நாங்கள் கூறலாம். ஆனால் மனிதர்களாகிய நாங்களும் இதே போன்றுதான் பிறந்த இடத்தை நாடிச் செல்ல ஆவலாக இருக்கிறோம். நாங்கள் கடவுளிடமிருந்து வந்தோம், அவரிடமே திரும்பப்போவோம். திருப்பாடல் கூறுகின்றது: "கலைமான் நீரோடையைத் தேடி அலைவது போல என் ஆன்மா உம்மில் தாகமாக இருக்கிறது, ஓ இறைவா! வாழும் தெய்வமே, எப்பொழுது நான் வந்து உம் முகத்தைக் காண்பேன்? (திருப்பாடல் 4:1-2).

நாங்கள் தற்பொழுது ஒரு விஞ்ஞான யுகத்தில் சீவிக்கின்றோம். நான் ஒரு சிறிய உதாரணத்தை, தரவிரும்புகின்றேன். கடவுள் புளோரிடாவின் கேப் கென்னடியில் உள்ள ஒரு பிரமாண்டமான விண்வெளி நிலையத்தைப் போன்றவர் ஆவார். நாங்கள் எல்லோரும் வானத்தில் நடமாடும் சிறுசிறு செய்மதிகளாகும். ஒழுங்காகச் செயல்பட ஒவ்வொரு செய்மதியும் அந்த நிலையத்துடன் தங்கள் தொடர்பை தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் தாங்கள் செல்லக் கூடிய சரியான பாதையைத் தெரிந்து கொள்ள முடியும். இன்றேல் பரந்த ஆகாயவெளியில் தொலைந்து போக நேரிடும். இதே விதமாக நாமும் நமது பிறந்து வந்த மூலஸ்தானமாகிய கடவுளிடம் தொடர்ந்து தொடர்பு வைத்திராவிட்டால் நாமும் நமது ஞான வழியை இழந்து விடுவோம். ஞானத்தில் பலனற்றுப் போய் விடுவோம். நினைவில் வையுங்கள் "நாம் வாழ்வதும் இயங்குவதும் இருப்பதும் அவரிலேதான் நாமும் அவரினமே" (தி.பணி: 17:28).

ஓ ஆதிகாலத்தின் முடிவில்லா அழகே
ஓ புதிய காலத்தின் முடிவில்லா அழகே
உம்மை நான் தாமதித்தே அறிந்து கொண்டேன்
உம்மை நான் தாமதித்தே அன்பு செய்தேன்
என் ஆன்மா உம்மில் சாந்தியடையும் வரை
அது அமைதியைக் காணாது.

- புனித அகுஸ்தீனார் -

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி- 91

இம்மாதத்திற்கான வினாக்கள் எபிரேயருக்கு எழுதிய திருமுகம் 09ம் அதிகாரத்திலிருந்து 13ம் அதிகாரம் வரையுள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் இப்பகுதி இயேசுக் கிறிஸ்துவின் உடன்படிக்கையின் மேன்மை, இயேசுக்கிறிஸ்துவின் சிலுவைப்பலியின் மேன்மை, நம்பிக்கையின் மேன்மை, கடவுளுக்கு உகந்த வாழ்வு என்பன பற்றிக் கூறுகின்றது.

பழைய உடன்படிக்கையின் விலங்குகளின் இரத்தப் பலிகள் எவ்விதம் சிலுவைப் பலியினால் பூரணத்துவம் அடைகின்றன என்பது பற்றிக் கூறுகின்றது. பழைய உடன்படிக்கையினைப் போலவே புதிய உடன்படிக்கையிலும் இரத்தமே காணிக்கையாக்கப்படுகின்றது

அங்கு விலங்குகளின் இரத்தம் பலியாக்கப்பட்டது. தலைமைக் குரு ஆண்டுக்கு ஒருமுறை திருத்தூயகத்துக்குள் சென்று விலங்குகளின் இரத்தத்தைப் பலியாக்கி அதைப் பாவப்பரிகாரம் அளிக்கும் சாதனமாக கூடியிருக்கும் மக்கள் மேல் தெளிப்பார்.

இங்கு கிறிஸ்து கல்வாரியின் கொல்கொத்தாவில் தனது இரத்தத்தை – தானே பலி ஒப்புக்கொடுப்பவராகவும் (குருவாகவும்) பலிப்பொருளாகவும் நின்று எக்காலத்திற்கும் உரிய பலியாகவும் மனுக்குலம் முழுவதற்குமான பாவப்பரிகாரத்தை சுவீகரித்துத் தந்துள்ளார் என்பது தெளிவாகச் சொல்லப்படுகின்றது.

இனி எமது வினாக்களுக்கு வருவோம்.

1) பலியாக்கப்பட்ட கன்றுக் குட்டிகள் வெள்ளாட்டுக் கிடாய்கள் இவற்றின் இரத்தம் தண்ணீரோடு கலந்து ஈசோப் செடியால் மக்கள் மீது தெளிக்கும் போது என்ன கூறித் தெளிப்பார்?

2) கிறிஸ்து மீண்டும் ஒருமுறை தோன்றுவார். எதற்காக?

3) நாம் எதனால் தூயவராக்கப்பட்டிருக்கின்றோம்?

4) நம்பிக்கை என்பது எது என எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் கூறப்படுகின்றது.

5) கடவுளைத் தேடிச் செல்வோர் எதை நம்பவேண்டும்?

6) கடவுள் மேல் கொண்டிருந்த நம்பிக்கைக்கு உதாரண மனிதராக ஆபிரகாம் என்ன காரணங்களால் உறுதிபடக் கூறப்படுகின்றார்?

7) எவற்றை உதறித் தள்ளிவிட்டு நமக்குக் குறிக்கப்பட்ட பந்தயத்தில் மன உறுதியோடு ஓட வேண்டும்?

8) கடவுள் ஏன் நம்மைத் தண்டித்துத் திருத்துகின்றார்?

9) இறைவனின் அசைக்க முடியாத அரசைப் பெற்றுக் கொண்ட நாம் என்ன செய்ய வேண்டும்?

10) நாம் துணிவோடு "ஆண்டவரே எனக்குத் துணை, நான் அஞ்ச மாட்டேன். மனிதர் எனக்கு எதிராக என்ன செய்ய முடியும் என்று நாம் துணிவோடு கூறலாம். எதனால்?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 89 இற்கான கேள்விகளுக்கு 30 பேர் விடையளித்திருந்தனர்**

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

## J. ஆன் ரொசானி,
## இல : 04, செக்குப்பிட்டி,
## கெக்கிராவ.

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்

## 10 அதிஸ்ரசாலிகள

1. அருட்சகோதரி. மேரி பற்றீசியா, ஆலயவீதி, தோட்டவெளி.
2. வி. விவித்தா ரூபா, நடுக்குடா, பேசாலை.
3. ஜெ. றேபனா, அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை.
4. ப. நிறோமி, இத்திக்கண்டல், அடம்பன்.
5. எஸ். எஸ். காஞ்சனா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
6. நா. சுபாசினி, ஆலங்குளம், வண்டக்கண்டல், மன்னார்.
7. கு. செலஸ்சன், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
8. எ. அருண் கிருபா குரூஸ், அந்தோனியார் வீதி, தாழ்வுபாடு.
9. அ. பிளேசியஸ் குரூஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
10. எ. புளோறன்ஸ், கங்காணி தீவு, நானாட்டான்.

# உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் போட்டி

### 89 இற்கான

# சரியான விடைகள்

(எபிரேயருக்கு எழுதிய திருமுகம் முதல் அதிகாரத்திலிருந்து ஐந்தாம் அதிகாரம் வரை)

1. இறைமகன் (1:4)

2. அடையாளங்கள் அருஞ்செயல்கள் மூலமாகவும் பல்வேறு வல்ல செயல்கள் மூலமாகவும், தம் திருவுளப்படி தூய ஆவியின் கொடைகளைப் பகிர்ந்தளித்ததன் மூலமாகவும் சான்று பகர்ந்தார். (2:4)

3. யேசு துன்புற்று இறந்தமையால் (2:9)

4. நம் மீட்பராம் யேசு (2:8)

5. முதலாவது ஒருவர் : மோசே, இரண்டாவது ஒருவர் : இயேசு (3:5-6)

6. நம்பிக்கை கொள்ளாத தீய உள்ளம் - கடவுளை விட்டு விலகும். தீய உள்ளம் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளும் படி அறிவுறுத்தப்படுகின்றது. (3:12)

7. நற்செய்தியை நம்பிக்கையுடன் கேட்காதவர்களுக்குக் கூறப்பட்டது. (4:2-3)

8. இறைமகனாம் கிறிஸ்து யேசு (4:15)

9. "நீர் என் மைந்தன் இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன்" மெல்கிசதேக் முறைப்படி நீர் என்றென்றும் குருவே. (5:5)

10. துன்பங்கள் வழியே (5:8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.104

## 1,2 திமொத்தேயு திருமுகங்கள்

உங்கள் விடைகளை 10.03.2011க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | 02 | ★ | ★ | | 03 | 04 |
| | 05 | ★ | ★ | | ★ | | ★ | 06 | |
| 07 | | | 08 | ★ | ★ | | ★ | | 09 |
| | 10 | ★ | | 11 | | 12 | | ★ | |
| 13 | | | | ★ | ★ | ★ | | ★ | ★ |
| | 14 | ★ | | | | | 15 | | |
| | ★ | | ★ | | ★ | 16 | | ★ | |
| 17 | ★ | | ★ | 18 | ★ | | 19 | ★ | |
| 20 | | | ★ | | 21 | ★ | | | 22 |
| 23 | ★ | 24 | | | ★ | | 25 | | |

(___என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. என் போதனை ___பொறுமை,.................... ஆகியவற்றை பின்பற்றி வந்திருக்கின்றாய்.
3. .................. இன்றைய ___ சென்று விட்டார்.
6. சிலர் இந்த நோக்கத்தைக் கைவிட்டு.............. பேச்சில் ஈடுபட்டுள்ளனர்.
7. நன்றி உணர்வுடன் ஏற்றுக் கொண்டால் எதையும்.............. வேண்டியதில்லை.
11. தூய .................. நேர்மையாளர் என மெய்ப்பிக்கப்பட்டார்.
13. அவர்கள் மேட்டிமை .............. கொள்ளலாகாது.
15. நிலத்தில் ___ முதற் ................ பெற வேண்டும்.
16. சபைக் கண்காணிப்பாளர் ___ வேண்டும். இல்லாவிட்டால் அவர்................ சொல்லுக்கு ஆளாகலாம்.
20. அவர்களது போதனை சதையழுகல் நோய் போன்று .............. விடும்.
24. மாற்கை .................... வா.
25. உலக ___ கதைகளையும் ............... விலகு.

### வலமிருந்து இடம்

2. எல்லா மனிதரும்................. பெறவும்—விரும்புகிறார்.
3. எனவே நீ இளவயதின் ___ நாடித் ............................
9. அவர்கள் ............. கதைகளிலும் ___ செலுத்துகிறார்கள்.
14. ........................ சொன்னவற்றைக் கடைப்பிடித்து வா.
15. அனைவருக்காகவும் ___ வேண்டுங்கள்;.......... பேசுங்கள்.
19. நமது சமயத்தின் ................... உண்மை உயர்வானது என்பதில் ஐயமேயில்லை.
21. ........................ வேதனைகளைத் ___ கொள்கிறார்கள்.
22. அவர் .................த் தம் திருத்தொண்டில் அமர்த்தினார்.
25. அலகையின் கண்ணியிலும் .................. நேரிடலாம்.

### மேலிருந்து கீழ்

1. இறைவார்த்தையை ...........................
2. திருச்சபையின் .............. அச்சுமையைச் சுமத்தக்கூடாது.
4. ஒரே கடவுளுக்கு என்றென்றும் ...... மாட்சியும் உரித்தாகுக.
8................... நமக்குக் கோழைத்தனத்தினை அல்ல ___ வழங்கியுள்ளார்.
10. தன்னலம் நாடுவோர், ..................... ஆசையுடையோர்.
13. அவனிடமிருந்து ............................க் காத்துக்கொள்.
15. போட்டி மனப்பான்மை..........ச் சொல், பொல்லாத ஊகங்கள் ___
16. தாங்கள் கொண்டுள்ள ...............ப் பற்றிற்கு ஏற்ப ___ கற்றுக் கொள்ளட்டும்.
17. விளையாட்டு வீரர் எவரும் ........... முறைகளுக்குட்பட்டு ___ முடியும்.
18. இறை மக்களின் ............களைக் கழுவுதல் ___ இருக்க வேண்டும்.
19. திருத்தொண்டர்கள் ஒரு ........... கொண்டவர்களாகவும் ___ இருக்க வேண்டும்.

### கீழிருந்து மேல்

5. ஒரு பெரிய வீட்டில் ....., வெள்ளிக் கலன்கள்___ உள்ளன.
12. கைம்பெண்கள் .............. குறைச் சொல்லுக்கும் ___ கட்டளையிடு.
13. இன்னலுற்றோருக்கு.............. செய்தல் போன்ற
14. பெண்கள் ___ அணி செய்து கொள்ளாமல் ...........த்தோடும் ___ வேண்டும்.
15. இயேசு கிறிஸ்துவின் திருத்தூதனான ................ எழுப்புவது.
18. மறைபொருளை ............... வர வேண்டும்.
22. ஆயினும் கடவுள் .................. இரங்கினார்.
23. ..........யான அந்த ஒருவர் எனக்கு மட்டுமல்ல ___ தருவார்.
24. தூய ஆவியார் தெளிவாய்க்...........படி ___விலகிப்போவர்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 102ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**

*C. மேரிஹெரக்சி*
இல. 2A/ 1, பெரியகமம்,
எழுத்தூர், மன்னார்.

**இரண்டாம் பரிசு:**

*எஸ். நிஷாந்தினி கூஞ்சு*
8ம் வட்டாரம்,
பேசாலை.

**மூன்றாம் பரிசு:**

*ம. ஆன்தர்ஷி*
பறப்பாங்கண்டல்,
சிறுக்குளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 40 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 35 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 102ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், அன்ரனிஸ் வீதி, பேசாலை
2. ஜெசிந்தன் - றேபனா, அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை.
3. கி. கிஷானி, கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.
4. நா. சுதர்ஷினி, ஆலங்குளம், வட்டக்கண்டல், மன்னார்.
5. தோ. யுவானிஸ், நடுக்குடா, பேசாலை.
6. எஸ். ஜெபர்சன் வாஸ், தலைமன்னார் பியர், தலைமன்னார்.
7. அகுஸ்தீன் இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
8. D. ஆன்ட்ரியா, கங்காணிதீவு, நானாட்டான்.
9. எஸ். ஆனந் டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
10. என். ஆன் யூலியானி றோச், பள்ளிமுனை, மன்னார்.
11. எஸ். நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதி மன்றம், மன்னார்.
12. அரியமலர் ஜெயரட்ணம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
13. தேவிகா பத்மராஜா, வயல் வீதி, பெற்றா, மன்னார்.
14. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
15. கமலா கிறிஸ்ரோபர், 64 வயல் வீதி, சின்னக்கடை, மன்னார்.
16. திருமதி. பேரின்பநாயகம், "வசந்தம்" ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
17. ம. நீற்றம்மா, பறப்பாங்கண்டல், சிறுக்குளம்.
18. செ. இன்பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
19. அ. பிளோசியஸ் குருஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
20. ஏ. ஆன் ஜெறோமி குருஸ், புனித சவேரியார் வீதி, தாழ்வுபாடு.
21. ஜே. யூட்பிறிடா, இல : 233, பாரதி புரம் (வடக்கு), கிளிநொச்சி.
22. ஈ.கே. எரோன்சி, C/O, காமல்.E, பறப்பாங்கண்டல், பெரியகுளம்.
23. C.A. மார்ஷல், 112/9c மணிலவத்த, ஹேகிந்த, வத்தள.
24. எஸ். எம். பிருந்தாவணி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
25. என். ஹெமின் தாட்சாயினி, மோட்டைக்கடை, நானாட்டான்.
26. ஆ. மேரி, வேதசாட்சி கோவில், தோட்டவெளி, மன்னார்.
27. கு. ஜெசிந்தன், அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை, மன்னார்.
28. குணமணி சேவியர், பெரிய கடை, மன்னார்.
29. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
30. சூ. இராக்கினி லீனா, மரியாள் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
31. எஸ். வினோதினி, நறுவிலிக்குளம்.
32. யோ. மரிய டிசானி, பெரியமுறிப்பு, பெரியகுஞ்சுக்குளம்.
33. கொன்சன், நோர்வே.
34. அருட்சகோதரி. மேரி பற்றீசியா, தோட்டவெளி.
35. எம். திரேசா, இல:118, 3வீதி, எமில்நகர், மன்னார்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 102இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ[1] | ளு | ந[2] | ர் | க[3] | லா | ய | சா[4] | ரி | [5]ப |
| ட் | * | ன் | ல | ப[6] | * | * | பே[7] | ச | ர |
| சி[8] | றை | றி | சி[9] | டு | ம் | ற | ற் | சீ | வி |
| ட் | * | * | ஞ் | * | * | * | * | * | ஆ |
| சா[12] | வி | ன் | அ[13] | ல் | ல | ஒ[14] | ரே | * | ணி |
| ய | * | * | * | * | * | ளி | * | * | * |
| ல் | * | றை | அ[15] | ன் | பெ[16] | ரு | மை | * | டு |
| மை | கை | ப[17] | * | * | த[18] | ம் | ட | ட் | நா[19] |
| டு | * | ரி | மை | டு | கா[20] | ற | * | * | ய் |
| க[21] | னி | வு | ர | வ[22] | ரா | பு[23] | கு | ங் | தா[24] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.103ற்கான முடிவுகளை 2011ம் ஆண்டு மார்ச் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# வாழ்க்கை.........

ஆசிரியர் கேட்டார்: இந்த கணினி யுகத்திலே
எது சிறந்தது?
நீ படித்து மருத்துவனாவது சிறப்பா?
விளையாட்டு வீரனாகத் திகழ்வது சிறப்பா?
சிறந்த கலைஞனாவது சிறப்பா?
தொழிலதிபராவது சிறப்பா?
தத்துவ ஞானியாக வாழ்வது சிறப்பா? எது சிறப்பு?
யோசித்துச் சொல்லுங்கள்!
அனைவரும் அமைதி காத்தனர்
இரண்டே நிமிடங்களில் சொன்னாள் சுகந்தி:

இந்தக் கணினியுகத்திலே ஒருவர்....
முழுமையான மனிதராக வாழ்வதே சிறப்பு!
நாகரிக வளர்ச்சியும் மதிப்பீடுகளின் தளர்ச்சியும்
ஒரே நேரத்தில் நடக்கும்...!
வாழ விதை போடு அது....
முளைக்க முயற்சிக்கும்
வாழ தண்ணீர் ஊற்று அது....
கிளைகளைத் தோற்றுவிக்கும்
வாழ உரம் போடு அது.....
சக்தியை அள்ளித் தரும்
வாழ்வில் எதிர் நீச்சல் போடு அது....
சாதனைகளை கொடுக்கும்
வாழ முயற்சித்துப் பார்...
முயற்சி திருவினையாக்கும்
வாழ்வை பிறருக்குக் கொடுத்துப் பார் அது....
உறவுகளைத் தரும்
வாழ்வை மீளாய்வாய் எடுத்துப் பார் அது....
மகிழ்ச்சியை அனுபவத்தை கண்டிருக்கும்
வாழ்வை வாழ்ந்து பார்...
நீயும் ஒரு மாமனிதனே!

## வாழ்க்கையை 8 வகையான

***பிரிக்கலாம்***



1. கருவறை வாழ்வு
2. பிறப்பு
3. விளையாட்டுப் போக்கான வாழ்வு
4. எதிர்த்து நிற்கும் வாழ்க்கை
5. உயரச் செல்லும் வாழ்க்கை
6. நடைபோடும் வாழ்க்கை
7. இரண்டாம் குழந்தைப் பருவம்
8. சங்கமிக்கும் வாழ்க்கை

வாழ்க்கை

தொடரும்...........

ஆக்கம்: அருட்சகோதரி . மார்த்தாள்

## 8ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 31 10 1947 — உதிர்வு 04 02 2003



**திருமதி டேவிற் சவரியம்மா குரூஸ் (புனிதம்)**

உலகினில் வாழ்கின்ற மாந்தருக்கு உருக்கொடுத்து, உயிர்கொடுத்து இறைவன் என்றால் மனிதர்களால் ஏற்படுகின்ற இறைவன் என்றே சொல்லலாம் அப்படி இறைவன் எமக்கு கொடுத்த பெரும் பாக்கியமே எமது அன்புத்தாய் அவர்களை நீர் உம்மிடம் அழைத்து எட்டு ஆண்டுகள் ஆயினும் ஆறிவிடுமா எம் சோகம் இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம் பக்தியையும் பண்பையும் எம்மில் வித்திட்டு எம்மை விட்டு மறைந்தாலும் அவரின் இனிய நினைவுகள் எம்மை விட்டு நீங்காது என்றும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும். அன்பின் தந்தையே இறைவா! எங்கள் தாயின் பாவக்கறைகளை நீக்கி அவரை உம்முடைய நித்திய வான் வீட்டில் சேர்த்து அவருக்கு நித்திய சாந்தி அளித்தருள வேண்டு மென்று உம்மை மன்றாடுகின்றோம். 04.02. 2011 காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

பிரிவால் துயருறும் : பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள் உற்றார், உறவினர்.

**சுந்தரம்** :- வட்டிக்கு காசு கொண்டுவந்துள்ளேன். ஏத்தனை வீதம் வட்டி போட்டு தருவீர்கள்.
**கடைக்காரர்** :- இங்கு 6% படி தான் வட்டி வழங்குகின்றேன்
**சுந்தரம்** :- இவ்வளவு குறைவாக இருக்கிறது இது கடவுளுக்கே பொறுக்காது
**கடைக்காரர்** :- மேலிருந்து பார்க்கும் கடவுளுக்கு 6% 9% மாகத்தான் தெரியும்
ஞா. ஆனுக்கிரகா டலிமா, கோயில் வீதி, தாழ்வுபாடு.

* * * *

**அதிகாரி** :- ஏன் ஒப்பீசுக்கு லேட்டு
**அலுவலர்** :- வரும் வழியில் ஒருவர் ஐந்து ரூபாவை தொலைச்சுட்டு தேடிக்கிட்டிருந்தார் அதுதான்.
**அதிகாரி** :- அவர் தேடிக்கிட்டிருந்தா நீ ஏன் லேட்டா வார?
**அலுவலர்** :- இல்ல சேர் அந்தக் காசு என் காலடியில்தான் கிடந்தது. அவர் போகும் வரையும் காத்திருந்து அத எடுத்துக் கொண்டு வர லேட்டாயிச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11 09 1977

உதிர்வு 06 02 2009

### குணராசா ஜீவராஜ்

அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை,
(எமில்நகர்)

"அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது, அழியாததாய் உயிர் பெற்று எழுகிறது"
(1கொரி 15:42)

நித்தமும் எங்களின் நிழலாய் இருந்தே,
அத்தனை அன்பையும் அள்ளிச் சொரிந்தே;
இத்தனை காலமும் இல்லற வாழ்வின்,
சொத்தென எம்மை சுமந்திட்ட அப்பா!
நித்திய வாழ்வில் நிம்மதி பெறுக நீர்.

அன்பு மனைவி, மகன், உற்றார், உறவினர்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23 11 1958

உதிர்வு 10 02 2009

### யோசவ் அல்போன்ஸ் யோகானந்தன்

(உபதபால் அதிபர் - பறப்பாங்கண்டல்)
(முதலைகுத்தி, உயிலங்குளம்)

'உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"(யோவா 11:25)

அன்பும் பாசமும் அகத்திலே கொண்டு பண்பாக எம்மைப் போசித்த அப்பா. பல்வேறு சவால்கள் துன்பங்கள் மத்தியிலும் புன்சிரிப்புடன் வாழ்ந்த அப்பா. அன்பின் ஊற்றாய், பொறுமையின் பொக்கிஷமாய், விழுமியங்களின் சிகரமாய் வாழ்ந்த அப்பா. நீர் எம்மை விட்டு உடல் ரீதியாகப் பிரிந்தாலும் அனுதினமும் உம் நினைவில் நாம் வாழுகின்றோம். விண்ணவர் கூட்டத்தில் நீரும் வாழ்கவென இறைவனை நாளும் வேண்டுதல் செய்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், பெற்றோர்,
சகோதரங்கள், உற்றார், உறவினர்

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 08 1926

உதிர்வு 06 02 2007

துறவு 06.09.1947

### அமரர் அருட்தந்தை
### ச. சாமிநாதர் சோசை

சத்திய வேத சத்தியங்கள் சாற்றிட
முற்றும் துறந்த சாமிநாத சற்குருவே
ஏற்றமுற எளியவர் இன்னல் தீர
ஆண்டுகள் அறுபது ஆண்டவன் அடியானாய்
அர்ப்பணிப்புடன் ஆற்றிய அருட்பணிக்காய்
வளமான விண்ணக வாழ்வு தனையே
வழங்கிட வேண்டுகின்றோம். எம் இறைவா!

தகவல் : குடும்பத்தினர்
வங்காலை, மன்னார்.

## நெஞ்சத்து நினைவலையில் நீங்கா நினைவுகள்



பி. செ. நீக்கிலாப்பிள்ளை



நீ. பாக்கியரஞ்சிதம்



அருட்பணி. நீ. பாக்கியரஞ்சித்

ஆலவிருட்சம் போல வேரூன்றி விழுதுவிட்டு கிளைபரப்பி நிழல்தந்த எம் அன்புத் தந்தையே விதி என்னும் இரண்டு எழுத்து உங்களை வேரோடு சாய்த்து ஆண்டுகள் பல போனதையா. ஆறுமோ எமது துயரம், மாறுமோ உங்கள் நினைவு. நாளெல்லாம் எம் கண்களுக்குள் வந்துகொண்டு இருக்கின்றீர் கனவாக அல்ல கண்ணீராக.

பத்து மாதம் சுமந்து ஈன்றெடுத்த வாழ்வினிலே உயரவைத்த அன்புத் தெய்வமே அம்மா! வருடம் ஒன்று சென்றதம்மா ஆறவில்லை எம் துயரம். அழியவில்லை உம் நினைவு. கண்ணீரில் நாம் தோய எம்மைப் பிரிந்து எங்குசென்றீர். இப்பூவுலகில் நாம் பூத்திருக்கும் காலம் வரை எம் உயிரோடு உறைந்திருக்கும் அம்மா, எந்நாளும் உங்கள் நினைவை சுமந்திருக்கும் அபலைகள் நாம் அம்மா.

மீளாத் துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்ற எம் அண்ணாவே! ஆறாதண்ணா எம் துயரம், வெதும்பித்துடித்து உருக்குலைந்து போனோம். நாம் விதைத்த விதை முளைக்க மறுப்பதில்லை. ஆதவனும் எழுவதற்கு மறுப்பதில்லை. பூமியும் சுழற்சியை நிறுத்துவதில்லை. உங்கள் நினைவும் எம்மை விட்டு அழிவதில்லை, எம் உள்ளத்தில் என்றும் ஒளிவீசும். உங்கள் அனைவரின் ஆன்மாக்கள் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாசமிகு மகன், மருமகள், பேரப்பிள்ளைகள்,தம்பி,
மைத்துனி, பெறாமக்கள். (கனடா)
தகவல்: சித்தி குடும்பம்

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 01 1935

உதிர்வு 30 01 2008

### அமரர். முத்துக்குமார்
### செபமாலை சந்தியோகு

(பெரிய பண்டிவிரிச்சான், மன்னார்)

ஐயா, நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் மூன்று
கடந்தாலும் கருணை நிறைந்த உங்கள் முகம்
என்றும் எம்மை விட்டு நீங்காது
வேண்டுகின்றோம் தினம் இறைவனை.
நீங்கள் என்றும் இறைவனோடு தங்கிவிட
உங்களின் வார்த்தைகள் இன்றும் எம் உள்ளங்களில்
பசுமரத்து ஆணி போல பதிந்து எம்மை வழி நடத்துகின்றது.
மறவோம் என்றும் உங்கள் பாசமதை
ஐயா இன்றும் துயருறுகின்றோம் உங்கள் பிரிவால்

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 11 1952

உதிர்வு 22 01 2010

### அ. வலோரியாம்பிள்ளை

(பாலைக்குளி, நானாட்டான்)

காலனவன் உம்மை பிரித்து ஓராண்டு சென்றதப்பா
கள்ளம் இல்லா உம் முகம் காணத்துடிக்கும் எம் மனம்
காலங்கள் பல சென்றாலும் ஆறாதப்பா எம் துயர்
நீங்கள் இன்றி.
கண் என காத்திட்ட உம் பிரிவால்
காலங்கள் தந்திட்ட வேதனைகள்
கண்களில் நீர்த் துளிக்க
கனத்த இதயத்துடன் வேண்டுகின்றோம்
கர்த்தரின் கரங்களில் உம் ஆன்மா சாந்தி பெற்றிட

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளை

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 29 04 1952

உதிர்வு 08 02 2010

### அமரர் திறினிற்றி அன்ரன் கமலநேசன்

(கொன்வென்ற் வீதி, மன்னார்)

இவரின் பிரிவால் துயருறும்,
பாசமிகு பிள்ளைகள், பெறாமக்கள், அருமைச் சகோதரி,
அன்புச் சகோதரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள், மற்றும் உற்றார் உறவினர்,
நண்பர்கள். (லண்டன், பிரான்ஸ்)

## 18ம் மாதம் நினைவஞ்சலி



மலர்வு 27 08 1945

உதிர்வு 06 08 2009

### அமரர் ஆன் மேரி பயஸ் பிலிப்புப்பிள்ளை

(கொன்வென்ற் வீதி, மன்னார்)

இவரின் பிரிவால் துயருறும்,
அன்பு மகள் அருணி, பெறாமக்கள், அருமைச் சகோதரி,
அன்புச் சகோதரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்கள், மைத்துனிகள், மற்றும் உற்றார் உறவினர்,
நண்பர்கள். (லண்டன், பிரான்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சிறுவர் பொழிவு

## விவிலிய சிறுகதை



### சிறுபெண் உயிர்த்தெழல்

(மாற்கு 5:22,23,35-43)


யாயீர் என்னும் பெயர் கொண்ட மனிதன் ஒருவர் இருந்தார். அவர் தொழுகைக்கூட தலைவர்களில் ஒருவராயிருந்தார். அவருக்கு பன்னிரண்டு வயதுள்ள சிறுபெண் பிள்ளை இருந்தாள். பிள்ளை மிகவும் சுகவீனமாயிருந்தாள். யாயீர் இயேசுவிடம் வந்து, அவரின் பாதத்திலே விழுந்து "பிள்ளை சாகுந்தறுவாயிலிருக்கின்றாள், நீர் வந்து அவள்மேல் உமது கையை வைப்பீரானால் அவள் சுகமடைந்து பிழைப்பாள்" என்று அவரை மிகவும் வேண்டிக் கொண்டார்.

இயேசு இந்த சிறுபெண்ணிற்கு உதவிசெய்ய விரும்பினபடியால் அவர் யாயீர் கூடவே சென்றார். இவர்கள் நடந்து போகையில் ஒரு மனிதர் இவர்களை வேகமாக சந்திக்க வந்தார். அவர் வந்து, "மிகவும் தாமதமாகிவிட்டது, உமது மகள் இறந்துவிட்டாள், ஆதலால் போதகரை மேலும் வரச்சொல்லாதீர்" என்றான். இயேசு அவரை நோக்கி, "பயப்படாதீர்; விசுவாசமுள்ளவனாயிரும் என்றார்.

இயேசு, யாயீரோடே அவரின் வீட்டிற்கு வந்து, உள்ளே நுழைந்து சிறுமியைப் பார்த்தார். இயேசு அவளின் கையைப் பிடித்து, "சிறுமியே எழுந்திரு" என்றார். உடனே சிறுபெண் கண்களைத் திறந்து, படுக்கையை விட்டு எழுந்து நடந்தாள். அவளுக்கு பூரண சுகம் கிடைத்தது. யாவரும் மிகவும் ஆச்சரியப்பட்டு மெய்மறந்து நின்றார்கள். இயேசு அவளுக்கு திரும்பவும் உயிர் கொடுத்தார்.

**படிப்பினை:** ஒருவராலும் செய்ய முடியாத காரியத்தை இயேசு செய்தார். காரணம் அவர் கடவுளின் மகன், அவரால் அனைத்தையும் செய்யக்கூடும்.

### பாலகரே! உங்கள் கைவண்ணத்தை இங்கே காட்டுங்கள்



சிறுகதைக்கு பொருத்தமான இப் படத்தை உங்கள் கலைநயத்திற்கேற்ப நிறந்தீட்டி மகிழுங்கள்

## 01வது பிறந்த நாள் வாழ்த்து




விடத்தல்தீவைச் சேர்ந்த **கெவில்ரன், நிலாகினி தம்பதியினரின் செல்வ புல்வன் கெவின்** தனது 1வது பிறந்த தினத்தை 31-01-2011 திங்கட்கிழமை டென்மார்க்கில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, மாமா, நிரு சித்தி, நியூளினி சித்தி, பெரியப்பா, பெரியம்மா, அத்தைமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணா, அக்கா, மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் குழந்தை இயேசுவின் அருள் வேண்டி உடல் உள ஆன்மீக பலத்துடன் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அப்பா

## மன்னார் மறைமாவட்ட 30ம் வருட பெருவிழாவின் பதிவுகள்





















## கவிதைப் பூக்கள்

### நட்பை துப்பாய்......



உன்னை நானும் என்னை நீயும்
அறிந்த வரையில்
நாம் பழகுவதோ
ஒரு நட்பு
இதை அறியாத
அயலவர்கள் பேசுகின்ற வார்த்தைகளோ
தப்பு

### கவிதைத் துளிகள்



கருவறை
ஓர் உயிர்
இன்னொரு உயிருக்காய்
கட்டிய ஊஞ்சல்





கல்லறை
வாழ்க்கை நாடகத்தில்
ஆடிக் களைத்த கால்கள்
ஓய்வெடுக்கும் மேடை

என். சுபாசினி, ஆலங்குளம், வட்டக்கண்டல், மன்னார்.

### சிறுவர் பொழிவில் பிரசுரமான நிறமற்ற, 'இயேசு பெத்லகேமில் பிறக்கின்றார்' என்ற படத்திற்கு கலைநயத்தோடு நிறந்தீட்டி அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் அதிஸ்ரசாலிகள்



மரியதாசன் ரிஷியானி
இல. 343/1, மன்னார் றோட்,
வேப்பங்குளம், வவுனியா.

யோ. மரிய டிசானி,
பெரிய முறிப்பு,
பெரியகுஞ்சுக்குளம்.

கி. யூட் இன்பராஜ்,
முருங்கன் பிட்டி, முருங்கன்.

இ. றொசான் - தர்சன்
பாலைக்குழி, அடம்பன்.

ஜெசிந்தன் - ஜெனுஷாந்
அந்தோனியார் புரம்,
இலுப்பைக்கடவை, மன்னார்.

யோ. மரிய டிசானி,
பெரியமுறிப்பு,
பெரிய குஞ்சுக்குளம்.

றி. றீன்சி குருஸ்
பாடசாலை வீதி, தாழ்வுபாடு.

யோ. யோண்சன்
யோசவாஸ் நகர்,
தோட்டவெளி, மன்னார்.

எ. ஜக்நொறிஸ், எழுத்தூர்,

எ. ஆன். ஜெறோமி குருஸ்
சவேரியார் வீதி, தாழ்வுபாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு ... றிறாஸ் - வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.